**அரசாணை (2D) எண்.9, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல். (மா.ந.1) துறை, நாள் 10.01.2020-ன் இணைப்பு**

**சென்னை மாநகராட்சி**

**திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், 2019**

மத்திய அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 (1986 ஆண்டின் 29வது சட்டம்)ன் பிரிவு 3, 6 மற்றும் 25ன் கீழ் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, திடக்கழிவுகளின் மேலாண்மையினை முறைப்படுத்த, திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு விதிகளின் 2016, உள்ளாட்சி அமைப்புகளின் வரம்பிற்குள் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் வழிவகைகளை செயலாக்க வேண்டிய பொறுப்பு திடக்கழிவுகளை சேகரித்தல், சேர்த்துவைத்தல், தரம்பிரித்தல், எடுத்து செல்லுதல் மற்றும் திடக்கழிவுகளை பதனிடுதல் மற்றும் முடிவான களைதலுக்கு உட்படுத்துதல் ஆகியவைகளுக்கான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு உள்ளாட்சி ஆட்சிக்குழுமத்தின் கடமையாகும். மேலும், ஒழுங்கின்றி கழிவுகளை கையாள்வதை தவிர்த்து இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ல் கூறியுள்ளபடி கழிவுகளை தரம்பிரித்து வழங்குவதை உறுதி செய்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி ஆட்சிக்குழுமத்திற்கு ஒத்துழைப்பு நல்குவது திடக்கழிவுகளை உருவாக்குபவர்களின் தலையாய கடமையாகும்.

சென்னை மாநகர மாநகராட்சி சட்டம், 1919, அத்தியாயம், 14, பிரிவு 349 மற்றும் 2016-ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ல் விதி 15 ஆகியவைகளின் அடிப்படையிலான ஒரு திறன்மிக்க திடக்கழிவு மேலாண்மை முறையினை உறுதி செய்ய, இதன் மூலம் திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2019 இயற்றப்படுகின்றன.

**சென்னை மாநகராட்சி சட்டம் -1919 ன் பிரிவு 349ன் படியும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016, விதி 15ன் படியும் இயற்றப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள்.**

1.0 **தலைப்பு** : இது "சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2019" என்று அழைக்கப்படும்.

**2.0 பொருந்தும் அளவு** : இந்த துணைவிதிகள், மாநகராட்சி பகுதிக்குள் உள்ள அனைத்து குடியிருப்புகள், நிறுவனங்கள், வணிக மற்றும் இன்ன பிற குடியிருப்புசாராத கட்டிடங்களிலிருந்து திடக்கழிவுகளை உருவாக்குபவர்களுக்கும் மற்றும் திடக்கழிவுகளை

மழைநீர் வடிகாலில், பாதாள சாக்கடைகளில், நீர் நிலைகளில் விட்டுச் செல்பவர்களுக்கும் பொருந்தும்.

3.0 **சொற்பொருள் விளக்கம்** : இந்த துணைவிதிகளில் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவரக்குறிப்புகளில், பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களில் சொற்பொருள் விளக்கத்தில் பொருள் கூறப்படாத சொற்களுக்கு சென்னை மாநகராட்சி சட்டத்தில் கூறியுள்ளபடி பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(1) "**முகமை**" என்பது, சென்னை மாநகராட்சியினால், அவர்களின் சார்பில், முகமை அமைப்பிற்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் நிறைவேற்றப்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில், தெருக்களை பெருக்குதல், கழிவுகளை சேகரித்தல், பயனாளர் கட்டணத்தை வசூலித்தல் மற்றும் இன்ன பிற இது போன்ற கடமைகளை நிறைவேற்றுதல் அல்லது பணிகளை செயலாக்குதல் ஆகிய செயல்பாடுகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபர்/அமைப்பு என்று பொருள்படும்.

(2) "**காற்றாட உரமாக்குதல்**" என்பது பிராண வாயு உள்ள நிலையில் தானே மக்கக்கூடிய உயிரி பொருட்களை அவைகளில் உள்ள நுண்மங்கள் அதன் நிலையில் நன்கு மக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட பதனிடும் முறை என்று பொருள்படும்.

(3) "**காற்றாட செரிமானம்**" என்பது பிராண வாயு இல்லாத நிலையில் மக்கக்கூடிய உயிரி பொருட்களை அவைகளில் உள்ள நுண்மங்கள் அதன் நிலையில் நன்கு மக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட பதனிடும் முறை என்று பொருள்படும்.

(4) "**உரிமம்**" என்பது ஒரு கட்டமைப்பினை இயக்குபவருக்கு, அல்லது நகர்புற உள்ளாட்சி அமைப்பிற்கு அல்லது திடக்கழிவுகளை அகற்றுவதற்கு உட்படுத்தும் பிற அமைப்புகளுக்கு மாசுகட்டுப்பாடு வாரியம் அல்லது மாசுகட்டுப்பாடு குழுவினால் வழங்கப்படும் ஒப்புதல் என்று பொருள்படும்.

(5) "**மக்கும் உயிரி கழிவுகள்**" என்பது நுண்ம உயிரினங்களினால் சாதாரண நிலையிலான மக்கக்கூடிய பொருட்களாக மாறுபாடு அடையக்கூடியவை என்று பொருள்படும்.

(6)"**உயிரி-வாயுவாக்கல்**" (**Bio-Methanation**) என்பது மக்கக்கூடிய கரிமப் பொருட்களில் உள்ள நுண்மங்களை சிதைத்து மக்கும் வகையில் வினைபுரிய

வைத்து அதன் மூலம் மீத்தேன் அதிக அளவில் உள்ள வாயுவினை உருவாக்கும் முறை என்று பொருள்படும்.

(7) "**பதிவு செய்யப்பட்ட வணிகப்பெயர் உரிமையாளர்**" என்பது, ஒரு பதிவு செய்யப்பட்ட பெயரில் ஏதேனும் ஒரு பொருளினை விற்கும் நபர் அல்லது நிறுவனத்தை குறிக்கும்.

(8) "**பெறுமளவு கழிவுகளை உருவாக்குபவர்கள்**" என்பது, சராசரியாக நாளொன்றிற்கு 100 கிலோவிற்கு மேல் திடக்கழிவுகளை உருவாக்கும் மத்திய அரசு அலுவலக கட்டடங்கள், அல்லது அதன் நிறுவனங்கள், மற்றும் மாநில அரசு அலுவலக கட்டடங்கள் மற்றும் அதன் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், சிறு மருத்துவ கூடங்கள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், பிற கல்வி நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், வணிக நிறுவனங்கள், அங்காடிகள், வழிபாட்டுத்தலங்கள், விளையாட்டுத்திடல்கள் மற்றும் வளாகங்கள் போன்றவவைகளை உள்ளடக்கும்.

(9) "**துணை விதிகள்**" என்பது உள்ளாட்சி அமைப்புகள், கணக்கெடுப்பு நகரங்கள் மற்றும் அறிவிக்கப்பட்ட நகரியப் பகுதிகள் ஆகியவற்றால் இந்த விதிகளை செயல்முறைப்படுத்த உருவாக்கப்பட்டுள்ள ஒரு ஒழுங்குமுறை கட்டமைப்பு என்று பொருள்படும்.

(10) "**கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக்கழிவுகள்**" என்பது கட்டுமானம் பழுதுபார்க்கும் பணி மற்றும் மறுகட்டுமான பணியின் போது அபாயமற்ற இயற்கையாக உருவாக்கப்பட்ட கழிவுகள் மற்றும் கட்டுமான இடிபாட்டுக்கழிவுகள் என்று பொருள்படும்.

(11) "**தூய்மை பகுதி**" என்பது ஒரு கட்டடத்தின் முன்னால் அல்லது அதனை சுற்றி அல்லது ஒரு கட்டடத்தை ஒட்டி நடைபாதையின் விளிம்பு வரை உள்ள பொது இடம் என்று பொருள்படும். இது வடிகால், நடைபாதை மற்றும் நடைபாதை விளிம்பில் நடப்பட்டுள்ள கல் ஆகியவைகளையும் உள்ளடக்கும்.

(12) "**வசூல் மையம்**" என்பது அனைத்து மண்டலங்களிலும் மற்றும் தலைமை அலுவலகத்திலும் உள்ள பயனாளர் கட்டணம் வசூலிக்கப்படும் இடம் என்று பொருள்படும்.

(13) "**எரி கழிவு**" மக்காத, மறுசுழற்சி செய்ய இயலாத, மறு உபயோகம் செய்ய இயலாத, ஒரு கிலோவிற்கு 1500 கலோரிகளுக்கு மேல் எரிதிறன் உள்ள அபாயகரமற்ற திடக்கழிவுகள் என்று பொருள்படும். இதில் பிளாஸ்டிக், மரக்கூழ் போன்றவை அடங்காது.

(14) "**பொது குப்பை தொட்டி**" என்பது, ஒன்று மற்றும் அதற்கு மேற்பட்ட கட்டட உரிமையாளர்கள் அல்லது அதில் குடியிருப்பவர்களால், கூட்டாக தரம் பிரிக்கப்பட்ட நகராட்சி திடக்கழிவினை சேர்த்து வைக்க சாலையோரங்களில் அல்லது ஏதேனும் ஒரு கட்டட உரிமையாளர் அல்லது குடியிருப்போரின் அல்லது பொதுவான கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்ட மாநகராட்சியால் பராமரிக்கப்படும் ஒரு கட்டமைப்பினை குறிக்கும்.

(15) "**எருவாக்குதல்**" என்பது உயிரி நுண்ம உயிரினங்களை ஒரு கட்டமைக்கப்பட்ட செயல் முறையில் மக்கச் செய்தல் என்று பொருள்படும்.

(16) "**உடன் பதனிடுதல்**" என்பது, மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத, ஒரு கிலோவிற்கு 1500க்கு மேல் கலோரிகள் எரிதிறன் உள்ள திடக்கழிவுகளை மூலப்பொருட்களாக பயன்படுத்துதல் அல்லது ஒரு எரிபொருளாக பயன்படுத்ததுதல் அல்லது இவைகள் இணைந்த இயற்கையான தாதுக்களுக்கு பதிலாக அல்லது எரிபொருளாக தொழிற்சாலைகளில் பயன்படுத்துதலைக் குறிக்கும்.

(17) "**பரவலாக்கப்பட்ட செயல்முறை**" என்பது திடக்கழிவுகளை பதனிடுதல் அல்லது முடிவான களைதலுக்கு திடக்கழிவுகளை கொண்டு செல்லும் போக்குவரத்து செலவினை குறைக்கவும், மக்கக்கூடிய கழிவுகளை பதனிடுதலுக்கு உட்படுத்துவதையும் மற்றும் மறுசுழற்சிக்கு உகந்தவைகளை மீட்டெடுப்பதை அதிகரிக்கவும் கழிவுகள் உருவாக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே பரவலாக்கப்பட்ட வசதிகளை ஏற்படுத்துவது என்று பொருள்படும்.

(18) "**அகற்றுதல்**" என்பது பதனிடுதல் செய்யப்பட்ட பிறகு அந்த செயல்முறையில் எஞ்சும் திடக்கழிவுகள், தெருக்களை பெருக்குவதில் சேகரமாகும் எதற்கும் உதவாத திடக்கழிவுகள், நிலத்தில் உள்ள வடிகால்களில் இருந்து எடுக்கப்படும் வண்டல்கள் ஆகியவைகளை நிலத்தடி நீர், நிலத்தின் மேற்புற நீர், காற்று மண்டலம் ஆகியவைகள் மாசுபடுதலையும் மற்றும் விலங்குகள் மற்றும் பறவைகளினால் ஈர்க்கப்படுவதையும் குறைக்கும் வண்ணம் இறுதியாகவும் பாதுகாப்பாகவும் குப்பை கொட்டும் தளத்திற்கு கொண்டு சென்று களைதல் என்று பொருட்படும்.

(19) "**தீங்கு விளைவிக்ககூடிய இல்லக்கழிவுகள்**"என்பது தேவையில்லை என்று களையப்பட்ட வர்ண டப்பாக்கள், காலி பூச்சிக்கொல்லி மருந்து டப்பாக்கள், சி.எப்.எல். விளக்குகள், குழல் விளக்குகள், மற்றும் இதர விளக்குகள், காலாவதியான மருந்துகள், உடைந்த பாதரச ஜூரமானிகள், பயன்படுத்தப்பட்ட பேட்டரிகள், பயன்படுத்தப்பட்ட ஊசிகள் மற்றும் ஊசிமருந்து குழல்கள் மற்றும் மாசு அடைந்த அளவை மானிகள் ஆகியவைகளைக் குறிக்கும்.

(20) "**வாயில்தோறும் சேகரித்தல்**" என்பது இல்லங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், நிறுவன அல்லது எந்த ஒரு குடியிருப்பில்லா கட்டடங்கள் ஆகியவவைகளின் வாயிலுக்கு சென்று திடக்கழிவுகளை சேகரித்தல் என்று பொருள்படும். மேலும், ஒரு குடியிருப்பு சங்கத்தின், பன்னடுக்கு கட்டடத்தின் அல்லது பன்னடுக்கு குடியிருப்புகளின், பெரிய குடியிருப்பு, வணிக அல்லது நிறுவன வளாகங்கள் மற்றும் கட்டடங்களின் தரைத்தளத்தின் நுழைவாயிலுக்கு சென்று அத்தகைய திடக்கழிவுகளை சேகரிப்பதையும் இது உள்ளடக்கும்.

(21) "**உலர் கழிவுகள்**" என்பது மக்காத கழிவுகள் மற்றும் தெருக்களை பெருக்கும் போது உருவாகும் எதற்கும் பயன்படாத கழிவுகள் தவிர்த்து, பிற கழிவுகள் என்று பொருள்படும். மேலும், இது மறுசுழற்சிக்குட்படும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள், எரி திறன் உள்ள கழிவுகள் மற்றும் சுகாதார அணையாடைகள் போன்றவற்றை உள்ளடக்கியவை.

(22) "**கழிவுகள் கொட்டும் தளங்கள்**" என்பது, சுகாதார முறையில் திடக்கழிவுகளை அகற்றுவதற்கான விதிகளை பின்பற்றாமல் உள்ளாட்சி அமைப்பினால் திடக்கழிவுகள் கொட்டுவதற்காக பயன்படுத்தப்படும் நிலத்தை குறிக்கும்.

(23) "**நிகழ்ச்சி**" என்பது, பொது இடங்களில் நடைபெறும் விழாக்கள், கொண்டாட்டங்கள், கூட்டங்கள், ஊர்வலங்கள், வாகன ஊர்வலங்கள், திறந்த வெளி அரங்க நடவடிக்கைகள், திரைப்பட படபிடிப்பு ஆகியவற்றை குறிக்கும்.

(24) "**தயாரிப்பாளரின் கூடுதல் பொறுப்பு**" என்பது, நெகிழி, தகரம், கண்ணாடி, நெகிழும் டப்பாக்கள் மற்றும் இன்ன பிறவற்றால் சிப்பமாகக்கட்டி விற்கப்படும் பொருட்களை அவைகளின் ஆயுட்காலம் வரையில் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவகையில் சிறப்பாக மேலாண்மை செய்ய வேண்டிய தயாரிப்பாளருக்கு உள்ள பொறுப்பு என்று பொருள்படும்.

(25) "**கட்டமைப்பு**" என்பது தரம் பிரித்தல், மீட்டெடுத்தல், சேர்த்து வைத்தல், சேகரித்தல், மறுசுழற்சி செய்தல், பதனிடுல், சுத்திகரித்தல் அல்லது பாதுகாப்பான முறையில் திடக்கழிவுகளை அகற்றுதல் போன்ற திடக்கழிவுகள் மேலாண்மை செயல்பாட்டு முறைகளை மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கும்.

(26) "**பிரபலமாக்கல் மற்றும் எச்சரிக்கை காலம்**" என்பது விதி மீறல்களுக்கு அபராதம் விதிப்பதிலிருந்து விலக்கு அளிக்கும் குறிப்பிடப்பட்ட காலம் என்று பொருள்படும்.

(27) "**அபராதம்**" என்பதுகழிவுகளை உருவாக்குபவர்கள் அல்லது கழிவுகள் பதனிடுதல் அல்லது கழிவுகளைஅகற்றும் கட்டமைப்பினை கொண்டவர்கள், இந்த விதிகளில் / துணை விதிகளில் சொல்லப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றாமைக்காக விதிக்கப்படும் தண்டத் தொகையினை குறிக்கும்.

(28) "**கையாளுதல்**" என்பது திடக்கழிவுகளை வகைப்படுத்தி பிரித்தெடுத்தல், தரம் பிரித்தல், பயன்படக்கூடிய பொருட்களை மீட்டெடுத்தல், சேகரித்தல், துகள்களாக்குதல், மூட்டையாக கட்டுதல், பொடியாக்குதல், சுமையேற்றுதல், சுமையிறக்குதல், வாகனங்களின் மூலம் எடுத்துச் செல்லுதல், பதனிடுதல் மற்றும் அகற்றுதல் ஆகிய அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கும்.

(29) "**அபாயகரமான கழிவுகள்**" என்பது இயற்பியல், வேதியல், எதிர்வினையாற்றுதல், உடல் சுகாதாரத்திற்கு, அல்லது சுற்றுச்சூழலுக்கு தனியாகவோ அல்லது மற்ற பிற கழிவுகளுடன் சேர்ந்தோ, அபாயம் விளைவித்தல், அல்லது அபாயம் விளைவிக்கக் கூடிய தன்மை கொண்ட ஒரு கழிவு என்று பொருள்படும். மேலும் அது, இந்த துணைவிதிகளின் அட்டவணை IIIல் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள அபாயகரமான கழிவுகள், மற்றும் அபாயகரமான மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை தாண்டி செல்லுதல்) விதிகள் 2016ல் அபாயகரமான கழிவுகளாக சொல்லப்பட்டுள்ள கழிவுகளையும் உள்ளடக்கும்.

(30) "**தோட்ட கலை, பூங்கா மற்றும் தோட்ட கழிவுகள்**" என்பது பூங்காகள், தோட்டங்கள், போக்குவரத்து தோட்ட திட்டுகள் போன்றவற்றை குறிக்கும். இவை கத்தரிக்கப்பட்ட புற்கள், வேகமாக வளரும் செடிகள், அதிக அளவில் கரிமங்கள் கொண்ட வெட்டப்பட்ட மரத்தின் பகுதிகள், மரக்கிளைகள், மரத்துண்டுகள், மரத்தூள்கள், மரத்தண்டுகள் அல்லது உலர்ந்த இலைகள், மரங்களை கத்தரித்து அழகுபடுத்தும் செயல்முறையில் உருவாகும் தாவர கழிவுகள், போன்ற தினசரி கழிவுகள் சேகரிப்பு முறைக்குள் கொண்டுவரப்படாத மக்கக்கூடிய கழிவுகள் என்று பொருள்படும்.

(31) "**வீட்டு கழிவுநீர் கடத்தி**" என்பது கழிவு நீர் செல்வதற்காக, அல்லது கழிவு நீர் வடிதலுக்காக, அல்லது கழிப்பறைக்கு, அல்லது சிறுநீர் கழிக்க, அல்லது கழிவுநீரை சேகரிக்க அல்லது மாசுபட்டுள்ளவைகளை நிரப்புவதற்காக அல்லது எவரேனும் ஒருவரால் சுத்தம் செய்வதற்காக அல்லது அசுத்தங்கள் அகற்றுவதற்கு செல்லும் வழியாக பயன்படுத்துவதற்காக கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட , பயன்படுத்தப்படும் சந்து அல்லது துண்டு நிலம் என்று பொருள்படும்.

(32) "**எரித்து சாம்பலாக்கல்**" எரியும் குணம் கொண்ட திடக்கழிவுகளை அதிக வெப்ப நிலையில் எரித்தல் அல்லது எரித்து சாம்பலாக்கும் ஒரு பொறியியல் செயல்முறையாகும்.

(33) "**எச்சங்கள்**" என்பது மக்காத, மறுசுழற்சி செய்ய இயலாத அல்லது எரியும் திறன் அற்ற, தெருக்களை பெருக்கும் போது சேகரமாகும் கழிவுகள் மற்றும் தூசிகள் மற்றும் நிலத்தின் மேற்புறத்தில் உள்ள வடிகால்களிலிருந்து அகற்றப்படும் வண்டல்கள் ஆகியவைகளை குறிக்கும்.

(34) "**முறைசாரா கழிவுகள் சேகரிப்போர்**" என்பது கழிவுகளை தரம்பிரித்தல், விற்பனை செய்தல் மற்றும் மறுசுழற்சிக்கு உட்படும் திடக்கழிவுகளை வாங்கும் தனி நபர்கள், சங்கங்கள் அல்லது கழிவு வியாபாரிகள் ஆகியவர்களை உள்ளடக்கும்.

(35) "**கழிவு நீர்**" என்பது திடக்கழிவு அல்லது பிற சாதனங்களின் வழியாக வெளியேறும் மற்றும் அக்கழிவின் கரைந்த மற்றும் அதிலிருந்து பிரிந்த பொருட்களைக் (Suspended Products) கொண்டுள்ள திரவம் என்று பொருள்படும்.

(36) "**குப்பை**"என்பது தேவையற்றது என்று ஒதுக்கப்பட்ட அனைத்து கழிவுகளையும் குறிக்கும். மேலும், இந்த துணைவிதிகளில் தடைசெய்யப்பட்டுள்ள கழிவுகளை தூக்கியெறிதல் அல்லது சேகரித்தல் மூலம் அசுத்தமான நிலையினை ஏற்படுத்தும், பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அல்லது நல்வாழ்விற்கு கேடு உருவாக்கும் அல்லது தொல்லை பயக்கும் கழிவுகளையும் இது உள்ளடக்கும்.

(37) "**குப்பைபோடுதல்**" என்பது, ஒரு பொது இடத்தில், குப்பைகளை போடும் பொழுது, அது கீழே விழுமோ, கீழிறங்குமோ, காற்றில் பறக்குமோ, அங்கிருந்து வேறு இடத்திற்கு அகன்று செல்லுமோ, நிலத்தில் ஊடுறுவுமோ, அல்லது அங்கிருந்து தப்புமோ, அல்லது ஒரு பொது இடத்தில் குப்பை கீழே விழுவதற்கு, கீழிறங்குவதற்கு, காற்றில் பறந்து வருவதற்கு, அங்கிருந்து வேறு இடத்திற்கு அகன்று செல்லுவதற்கு, நிலத்தில் ஊடுறுவுவதற்கு, அல்லது அங்கிருந்து தப்புவதற்கு வாய்ப்பு உள்ளதோ அத்தகைய பொது இடத்தில் குப்பையினை போடுதல் என்று பொருள்படும்.

(38) "**உள்ளாட்சி அமைப்பு**" என்பது இந்த துணை விதிகளைப்பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சியை குறிக்கும்.

(39) "**மீட்டெடுக்கக்கூடியவற்றை மீட்டெடுக்கும் கட்டமைப்பு வசதி**" என்பது, உள்ளாட்சி அமைப்பினால் அல்லது வேறு ஒரு அமைப்பினால் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட (விதி 2ல் சொல்லப்பட்டுள்ள) ஏதேனும் ஒரு நபர் அல்லது முகமை அமைப்பு ஆகியவர்களினால், அங்கீகரிக்கப்பட்ட கழிவுகளை சேகரிக்கும் முறைசாரா பிரிவினர் மூலம் அல்லது முறைசாரா மறுசுழற்சி செய்வோர் அல்லது வேறு ஏதேனும் பணிகளை செய்யும் பணியாளர்கள் மூலம் பல்வேறு வகையினை சார்ந்த கழிவுகளை தரம் பிரித்தல், வகை படுத்துதல் மற்றும் மறுசுழற்சிக்குகந்த பொருட்களை மீட்டெடுத்தல் ஆகியவைகளுக்கான கட்டமைப்பு வசதி என்று பொருட்படும். மேலும் அது, விதி 2ல் சொல்லப்பட்டுள்ள அமைப்புகளினால் கழிவுகள் வழங்கப்படுவதற்கு அல்லது பதனிடுதல் அல்லது முற்றிலும் அகற்றுவதற்கு முன்னர் அவ்வாறு மீட்டெடுக்கப்படுவதற்கு உள்ள கட்டமைப்பு வசதியினையும் குறிக்கும்.

(40) "**அக்கம் பக்கத்தார்**"என்பது ஒரு இடத்தின் அமைவிடத்தையும், வசிப்போர்களின் குணத்தினையும் அல்லது அங்கு வசிப்பவர்களையும் பொறுத்து வரையரை செய்யப்பட்ட இடம் என்று பொருள்படும்.

(41) "**புதிய கட்டுமானம்"**" என்பது சென்னை மாநகராட்சியின் எல்லைக்குள் கட்டப்பட்டு வரும் அனைத்து வகை கட்டுமானங்களையும் குறிக்கும்.

(42) "**மக்காத கழிவுகள்**"என்பது நுண்ம உயிரினங்களினால் சாதாரண நிலையான கூறுகளாக மக்கும் குணம் கொண்டிராத கழிவுகள் என்று பொருள்படும்.

(43) "**தொல்லை**" என்பது, காயம், அபாயம், எரிச்சல், பார்க்கத்தகாததாக இருப்பது, நுகர்ந்தால், அல்லது காதினால் கேட்டால் உயிருக்கு அல்லது உடல் நலத்திற்கு அல்லது உடைமைக்கு அபாயம் விளைவிக்கக்கூடியது போன்ற ஏதேனும் ஒரு செயல், அல்லது செய்ய தவறுதல், இடம் அல்லது பகுதி என்று பொருள்படும்.

(44) "**தொல்லை கண்டறிவாளர்கள்**" என்பது பொதுத் தொல்லையினை கண்டுபிடிக்க ஆணையரால் நியமனம் செய்யப்பட்ட மாநகராட்சியின் பணியாளர்களை குறிக்கும்.

(45) "**குடியிருப்போர்**" என்பது எந்த ஒரு நிலத்தில் அல்லது கட்டடத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில் வசித்தால் அல்லது எந்த ஒரு காரணத்திற்காகவும் பயன்படுத்தினால் அவர் அந்த கட்டடத்தில் அப்போதைய குடியிருப்பாளர் என பொருள்படும்.

(46) "**ஒரு கட்டமைப்பை இயக்குபவர்**" என்பது கழிவுகளை கையாள ஒரு கட்டமைப்பு வசதியினை உடைமையாக கொண்டுள்ள அல்லது இயக்குகின்ற ஒரு அமைப்பு என்று பொருள்படும். மேலும் அது எந்த ஒரு உள்ளாட்சி அமைப்பினையும் மற்றும் உள்ளாட்சி அமைப்பினால் நியமனம் செய்யப்பட்ட எந்த ஒரு அமைப்பு மற்றும் முகமை அமைப்பினையும் உள்ளடக்கும்.

(47) "**உரிமையாளர்**" என்பது ஒரு கட்டடத்தின், நிலத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் மீது எவரொருவர் உரிமையினை செலுத்துகிறாரோ அவரைக் குறிக்கும்.

(48) "**முதற்கட்ட சேகரிப்பு**" என்பது, திடக்கழிவுகள் உற்பத்தியாகும் இடங்களான, வீடுகள், கடைகள், அலுவலகங்கள் மற்றும் பிற குடியிருப்பு சாரா கட்டிடங்கள் அல்லது சேகரிப்பு மையங்கள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளினால் குறிப்பிடப்பட்டுள்ள இன்ன பிற இடங்களிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை சேகரித்தல் என்று பொருள்படும்.

(49) "**பதனிடுதல்**"என்பது தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகள் மறு உபயோகத்திற்காக, மறுசுழற்சிக்காக, அல்லது புதிய ஒரு பொருளாக மாற்றப்பட கையாளப்படும் ஒரு அறிவியல் செயல்பாடு என்று பொருள்படும்.

(50) "**பொது இடம்**" என்பது எந்த ஒரு சாலை, வளைவு சாலை, சுரங்கப்பாதை, சந்து, நடைபாதை, குறும்பாதை அல்லது பாதை, நெடுஞ்சாலை, தரைப்பாலம், பாலம், அதில் நடந்து செல்வோர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அல்லது பொதுமக்கள் நடந்து செல்ல உரிமை பெற்றிருக்கும் பூங்காக்கள், தோட்டங்கள், பொழுது போக்குத்திடல்கள், விளையாட்டுத்திடல்கள், கடற்கரைகள், நீர் நிலைகள், நீர் ஆதாரங்கள், பொது வணிக வளாகங்கள், அரசு மற்றும் நகராட்சி கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள், சந்தைகள், இறைச்சிக்கூடங்கள், நீதி மன்றங்கள் மற்றும் இன்ன பிறவற்றையும் உள்ளடங்கியதாகும்.

(51) "**பெட்டகங்கள்**" என்பது எந்த ஒரு வகையினை சார்ந்த உள்ளாட்சி திடக்கழிவுகளையும் சேர்த்து வைக்க பயன்படுத்தப்படும், தொட்டிகள் மற்றும் பைகள் உள்ளிட்ட கொள்கலன் என்று பொருள்படும்.

(52) "**மறுசுழற்சி செய்தல்**" என்பது, தரம் பிரிக்கப்பட்ட மக்காத திடக்கழிவுகளை கொண்டு ஒரு புதிய பொருள் அல்லது தயாரிப்பினை உருவாக்குதல் அல்லது புதிய பொருட்களுக்கான மூலப்பொருளாக, அந்த புதிய பொருள் அதன் அசலைப்போல் இருந்தாலும் இல்லாவிட்டாலும், புதுப்பொருளாக மாற்றும் செயல்பாடு என்று பொருள்படும்.

(53) "**மறுசுழற்சிக்குகந்த கழிவுகள்**" என்பது உள்ளாட்சி திடக்கழிவுகளில் அட்டவணை-II-ல் தெரிவிக்கப்பட்டுள்ள கழிவுகள் ஆகும். இவை 'உலர் கழிவுகள்' என்றும் அழைக்கப்படும். இதில் கண்ணாடி, காகிதம், உலோகம், பிளாஸ்டிக், துணிவகைகள், மின்சாதன பொருட்கள் மற்றும் இன்ன பிற பொருட்களும் உள்ளடங்கும்.

(54) "**மறுகட்டுமானம்**" என்பது, சிதிலமடைந்த நிலையில் உள்ள பழைய குடியிருப்பு வகையினை சார்ந்த கட்டடங்கள் வணிக வகையினை சார்ந்த கட்டடங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்புகளையும் இடித்துவிட்டு அதே இடத்தில் மீண்டும் புதிதாக கட்டுதல் என்று பொருட்படும்.

(55) "**மீதம்**" பல்வேறு நடைமுறைகள், பதனிடல்கள் அல்லது உயிரித்துணை உருமாற்றம்/ உயிரித்துணையற்ற உருமாற்றம்/ மறு சுழற்சி மூலம் திட அல்லது அரைகுறை திடநிலையில் மறுசுழற்சி செய்யத்தக்க நிலையில் உண்பதற்கோ, உபயோகப்படுத்துவற்கோ அல்லது பதனிடவோ இயலாத கழிவுகள்.

(56) "**கழிவு சார் எரிப்பொருள்**" என்பது, பிளாஸ்டிக், மரம், மரக்கூழ் மற்றும் பிற குளோரின் கலக்கப்பட்டிராத எரியும் குணம் கொண்ட கூறுகளை திடக்கழிவுகளிலிருந்து பிரித்து, அவைகளை உலரவைத்து, துகள்களாக்கி, அதில் உள்ள ஈரப்பதத்தை வெளியேற்றி மற்றும் அவைகளை அடர்த்தி கொண்டதாக

நெருக்கமுள்ள கட்டிகளாக, அல்லது சீரான உருவமற்ற கற்களை போன்ற வடிவத்தில் அல்லது செவ்வக வடிவ கட்டிகளாக மாற்றுதல் என்று பொருள்படும்.

(57) "**கழிக்கப்பட்ட திடக்கழிவுகள்**" என்பது, திடக்கழிவுகள் பதனிடுதல் செயல்பாடு மூலம் கழிக்கப்பட்ட மறுசுழற்சிக்கோ அல்லது மேற்கொண்டு பதனிடுதலுக்கோ பயன்படுத்தப்படாத கழிவுகள் என்று பொருள்படும்.

(58) "**விதிகள்**" என்பது திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 என்று பொருள்படும்.

(59) "**சுகாதாரம்**" என்பது சுத்தமாக இருப்பதை ஊக்குவிப்பதும் மற்றும் நோய்களை தடுப்பது மற்றும் சுற்றுச்சூழல் காரணமாக ஏற்படும் நோய்களை தடுப்பது என்று பொருள்படும்.

(60) "**சுகாதாரமான திடக்கழிவு நில சேகரிப்பு**" என்பது நிலத்தடிநீர், நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்கள் மாசுபடுதல், காற்றில் தூசி ஏற்படுதல், காற்றில் பறக்கக் கூடிய தூசிகள், துர்நாற்றம் எழுதல், தீ ஆபாயங்கள் ஏற்படுதல், விலங்குகளினால் ஏற்படும் தொல்லை, பறவைகளினால் ஏற்படும் தொல்லை, பூச்சிகள் மற்றும் பிராணிகளினால் எற்படும் தொல்லை, மற்றும் நிலத்தடியில் இருந்து ஏற்கனவே கொட்டப்பட்ட கழிவுகளிலிருந்து வெளியேறும் விஷவாயுவினால் ஏற்படும் அபாயம், ஆகியவை ஏற்படாத வகையில் தேவையான பாதுகாப்பு வழிவகைகளுடன் நிலத்தின் மீது வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு வசதியில் எஞ்சிய திடக்கழிவுகளையும், எதற்கும் பயன்படாத கழிவுகளையும், இறுதியாக அகற்றுதல் என்று பொருள்படும்.

(61) "**நிலசேமிப்பு திடக்கழிவு கிடங்கு**" என்பது, நிலத்தடி நீர், நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்கள் மாசுபடுல், காற்றில் தூசி ஏற்படுதல், காற்றில் பறக்கக் கூடிய தூசிகள், துர்நாற்றம் எழுதல், தீ அபாயங்கள் ஏற்படுதல், விலங்குகளினால் ஏற்படும் தொல்லை, பறவைகளினால் ஏற்படும் தொல்லை, பூச்சிகள் மற்றும் பிராணிகளினால் ஏற்படும் தொல்லை, மற்றும் நிலத்தடியில் இருந்து ஏற்கனவே கொட்டப்பட்ட கழிவுகளிலிருந்து வெளியேறும் விஷவாயுவினால் ஏற்படும் அபாயம், ஆகியவை ஏற்படாத வகையில் தேவையான பாதுகாப்பு வழிவகைகளுடன் எஞ்சிய கழிவுகளை சேமிக்கும் கட்டமைப்பு என்று பொருள்படும்.

(62) "**சுகாதார கெடுதல் கழிவுகள்**" என்பது குழந்தைகளுக்கு பயன்படுத்தும் அணையாடைகள், பெண்கள் பயன்படுத்தும் சுகாதார அணையாடைகள், திரவங்களை உறியும் பஞ்சுகள், ஆணுறைகள், உறிஞ்சும் தாள்கள் மற்றும் இது போன்ற இன்ன பிற கழிவுகளை உள்ளடக்கும்.

(63) “**தூய்மை பணியாளர்**” என்பது மாநகராட்சியினால், மாநகராட்சி திடக்கழிவுகளை சேகரிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு மாநகராட்சியில் உள்ள வடிகால்களை பேணுவதற்கும் நியமிக்கப்பட்ட நபரைக் குறிக்கும்.

(64)“**அட்டவணை**” என்பது இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள அட்டவணையினை குறிக்கும்.

(65) “**இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகரிப்பு**” என்பது திடக்கழிவு பதனிடு களம் அல்லது திடக்கழிவு கொள் களத்திற்கு திடக்கழிவு கொண்டு செல்வதற்காக இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகரிப்பகங்கள் அல்லது பயன்படு பொருட்கள் மீட்டெடுக்கும் மையம் அல்லது குப்பை தொட்டிகளில் தற்காலிகமாக திடக்கழிவுகளை சேகரித்து வைத்தல்.

(66) “**தரம் பிரித்தல்**” என்பது திடக்கழிவின் பல்வேறு கூறுகளை, விவசாயக்கழிவுகள் மற்றும் பால்பண்ணைகழிவுகள் உள்ளிட்ட மக்கும் கழிவுகள், மறுசுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய மற்றும் மறுசுழற்சிக்கு உட்படுத்த இயலாத எரிதிறன் உள்ள கழிவுகள், சுகாதார கெடுதல் உண்டாக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய எதற்கும் பயனற்ற கழிவுகள், குடியிருப்புகளில் உருவாகும் அபாயகரமான கழிவுகள் மற்றும் கட்டுமான மற்றும் கட்டட இடிபாட்டுக்கழிவுகள் என்று பிரித்து வகைபடுத்தி தனித்தனியாக சேர்த்து வைக்கப்படுவதைக் குறிக்கும்.

(67) “**சேவை வழங்குவோர்**” என்பது, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல், மின்வசதி, தொலைபேசி வசதி, சாலைகள் வசதி மற்றும் வடிகால் வசதி மற்றும் இன்ன பிற சேவைகளை வழங்கும் அதிகார அமைப்பினை குறிக்கும்.

(68) “**திடக்கழிவு**”என்பது அனைத்து உள்ளாட்சி அமைப்பின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் உருவாகும், திடக்கழிவு அல்லது திட மற்றும் திரவ நிலையில் உள்ள கழிவு, சுகாதார கழிவு, வணிக கழிவு, நிறுவன கழிவு, சமையல் மற்றும் அங்காடி கழிவு மற்றும் குடியிருப்பு வகையில் இல்லாத பிற இடங்களில் உருவாகும் கழிவு, தெருக்களை பெருக்கும் போது உருவாகும் கழிவு, நிலத்தின் மேற்புறம் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களிலிருந்து அகற்றப்பட்ட கழிவு, தோட்டக் கழிவு, விவசாய மற்றும் பால்பண்ணைக்கழிவு, சுத்திகரிக்கப்பட்ட மருத்துவக்கழிவு, ஆகிய கழிவுகளை குறிக்கும். ஆனால் இதில் உள்ளாட்சி அட்டவணையில் விதி 2-ல் கூறப்பட்டுள்ள மருத்துவக்கழிவு மற்றும் மின்சாதன கழிவு, மின்கலக்கழிவு, கதிர் வீச்சு கழிவுகள் அடங்காது.

(69) “**வகைப்படுத்துதல்**” என்பது ஒன்றோடு ஒன்று கலந்து கலவையாக உள்ள கழிவுகளிலிருந்து மறுசுழற்சிக்குகந்த காகிதம், பிளாஸ்டிக், அட்டைகள்,

உலோகங்கள், கண்ணாடிகள் மற்றும் இன்ன பிற மறுசுழற்சிக்குகந்த பொருட்களை பல்வேறு கூறுகளாகவும் மற்றும் வகைகளாகவும் பிரித்தெடுத்தல் என்று பொருள்படும்.

(70) "**உருவாகுமிடம்**" என்பது கழிவுகள் உருவாகும் கட்டடம் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கட்டட உரிமையாளர்களால் அல்லது குடியிருப்பவர்களால் உள்ளாட்சி திடக்கழிவுகளை சேகரிக்க பயன்படுத்தப்படும் ஒரு சமுதாய கழிவுகள் சேகரிப்பு மையம் என்று பொருள்படும்.

(71) "**உமிழ்கலம்**" என்பது, பொருளட்களை உமிழ்வதற்காக புனல் (funnel) போன்ற மேற்புறம் கொண்ட மண்ணால் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட ஒரு பானை என்று பொருள்படும்.

(72) "**நிலைபடுத்தல்**" என்பது, மக்கக்ககூடிய கழிவுகளை, அது மக்கி கழிவுநீரை வெளியேற்றாத, துர்நாற்றம் வீசாத நிலைக்கு, பண்ணை நிலங்களுக்கு பயன்படும் வகையில் மண் அரிப்பினை கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கு ஏற்றதாகவும், மண் சீரமைப்பிற்கு பயன்படுத்தக்கூடியதாகவும் உயிரியில் ரீதியில் மக்க வைக்கும் செயல்முறையாகும்.

(73) "**நிலைப்படுத்தப்பட்ட மக்கும் கழிவுகள்**" என்பது இயந்திரம் மற்றும் உயிரியல் ரீதியில் நிலைப்படுத்தப்பட்ட செயல்பாட்டின் மூலம் உயிரியல் ரீதியில் நிலைப்படுத்தப்பட்ட (கிருமிகள் இல்லாத) மக்கக்கூடிய கழிவுகளை குறிக்கும். இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளை பயன்படுத்த தடையில்லை.

(74) "**தெரு வணிகர்**" என்பது பொருட்கள், பண்டங்கள், விற்பனை பொருட்கள், உணவு பண்டங்கள் அல்லது தினசரி பயன்பட்டுக்கான வியாபார பொருட்களை விற்பனை செய்பவர்கள் அல்லது பொதுமக்களுக்கு ஒரு தெருவில், சந்தில், சாலையோர பாதைகளில், நடைபாதைகளில், நடைமேடைகளில், பொதுப் பூங்காக்களில், அல்லது எந்த ஒரு பொது இடத்திலும் அல்லது தனியார் இடத்திலும், தற்காலிக கட்டுமானத்திலும் அல்லது இடம் விட்டு இடம் சென்று சேவைகளை வழங்குபவர்களை குறிக்கும். மேலும் இச்சொல் கூவி விற்பவர்கள், வண்டியில் விற்பனை செய்பவர்கள், ஒரிடத்தில் நிலையாக இருந்து விற்பனை செய்பவர்கள் ஆகியவர்களையும் அவர்கள் உள்ளூர் பகுதிக்குள் இருந்தாலும் மற்றும் ஒரு வட்டாரத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களையும் உள்ளடக்கும். அது போலவே, "தெரு வணிகம்" என்ற சொல், வார்த்தைகளில் மாறுபாடு இருந்தாலும், சொல்லும் விதத்தில் வேறுபாடு இருந்தாலும், அதே பொருள்படும்.

(75) "**களைதல் கட்டணம்**" என்பது உள்ளாட்சி அதிகார அமைப்புகளினால் அல்லது மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட முகமை அமைப்பினால் உரிமதாரருக்கு அல்லது ஒரு பதனிடுதல் கட்டமைப்பு வசதியினை இயக்குபவருக்கு அல்லது எஞ்சிய திடக்கழிவுகளை திடக்கழிவுகள் அகற்றப்பட உள்ள தளத்தில் இருந்து அகற்றப்பட்டு வழங்கப்பட வேண்டிய கட்டணம் அல்லது ஆதரவு விலை என்று பொருள்படும்.

(76) "**போக்குவரத்து**" என்பது, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பகுதி சுத்திகரிக்கப்பட்ட, அல்லது சுத்திகரிக்கப்படாத திடக்கழிவுகளை, சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு, அதற்கென தனியே வடிவமைக்கப்பட்ட மற்றும் மூடப்பட்ட நிலையில் உள்ள போக்குவரத்து வாகனங்களின் மூலம், துர்நாற்றம் ஏற்படாத வகையிலும், குப்பை சிதறல்கள் இல்லாத வகையிலும், அருவறுக்கத்தக்க காட்சி இல்லாத வகையிலும் கொண்டு செல்லுதல் என்று பொருள்படும்.

(77) "**திடக்கழிவுகள் மாற்று நிலையம்**" என்பது திடக்கழிவுகளை அவைகள் சேகரிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பெற்றுக் கொள்ளவும் அவ்வாறு பெறப்பட்ட திடக்கழிவுகளை சுமையேற்றிச் செல்லும், மூடப்பட்ட நிலையில் உள்ள அதிக சுமையேற்றிச் செல்லும் வாகனங்கள் அல்லது பெரிய கொள்கலங்கள் கொண்ட வாகனங்கள் மூலம் கழிவுகள் பதனிடுதல் மற்றும் கழிவுகள் அகற்றப்படும் இடங்களில் வாகனங்கள் மூலம் கொண்டு செல்ல ஏற்படுத்தப்பட்டுள்ள வசதி என்று பொருள்படும்.

(78) "**சுத்திகரித்தல்**" என்பது திடக்கழிவுகளின் அளவினையும் தீங்கு விளைவிக்கும் குணத்தையும் குறைப்பதற்காக ஒரு கழிவின் இயற்பியல், வேதியல் அல்லது உயிரியல் குணங்களை அல்லது அவைகள் அனைத்தும் கலந்துள்ள குணங்களை அல்லது அந்த கழிவினுள் அடங்கியிருக்கும் பொருட்களை மாற்றியமைக்க வடிவமைக்கப்பட்ட ஒரு உத்தி அல்லது செயல்முறை என்று பொருள்படும்.

(79) "**பயனாளர் கட்டணம்**" என்பது, உள்ளாட்சி அமைப்புகளினால் அல்லது விதி 2-ல் சொல்லப்பட்டுள்ள ஏதேனும் ஒரு அமைப்பினால், திடக்கழிவுகளை சேகரித்தல், போக்குவரத்து செய்தல், பதனிடுதல் மற்றும் அகற்றுதல் ஆகிய சேவைகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை அல்லது அந்த செலவினத்தின் ஒரு பகுதியை நேர்செய்ய திடக்கழிவுகளை உருவாக்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தை குறிக்கும்.

(80) "**காலி மனை**" என்பது ஒரு தனியார்/ நபருக்கு சொந்தமான அதே நேரத்தில் அவர்களால் / அவருடைய நேரடி பயன்பாட்டில் இல்லாத எந்த ஒரு நிலம் அல்லது திறந்த வெளி இடத்தினை குறிக்கும்.

(81) "**மண்புழு மூலம் உரம் தயாரித்தல்**" என்பது மக்கக்கூடிய கழிவுகளை மண்புழுக்களை பயன்டுத்தி எருவாக மாற்றும் செயல்முறை என்பது பொருள்படும்.

(82) "**கழிவுகள் மேலாண்மை முன்னுரிமை வரிசை**" என்பது கழிவுகள் உருவாவதை முன்னரே தடுத்தல், குறைத்தல், மறுபயன்பாட்டிற்கு உட்படுத்தல், மறுசுழற்சி செய்தல், மீட்கக்ககூடிய பொருட்களை மீட்டெடுத்தல் மற்றும் கழிவுகளை அகற்றுதல் ஆகிய திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டு முறைகளில் மிகவும் சிறந்த தேர்வுரிமையாக கழிவுகள் உருவாகுவதை தடுப்பதற்கும் மிகவும் குறைந்தபட்ச அளவே கழிவுகளை நிலத்தில் கொட்டுவதற்கும் முக்கியத்துவம் அளித்து முன்னுரிமை வரிசைப்படுத்துதல் என்று பொருள்படும்.

(83) "**கழிவுகளை உருவாக்குபவர**" என்பது, கழிவுகளை உருவாக்கும் அனைவரையும், அல்லது குழுவாக உள்ள நபர்கள், அனைத்து குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் இந்திய ரயில்வே துறை இராணுவத்துறை உள்பட குடியிருப்பு வகையினை சாரா நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

(84) "**கழிவுகளை மீட்டெடுப்போர்**" என்பது கழிவுகள் உருவாகும் இடங்களான, தெருக்கள், குப்பை தொட்டிகள், மீட்டெடுக்கக்கூடிய பொருட்களை பிரித்தெடுக்கும் கட்டமைப்பு வசதிகள், பதனிடுதல் மற்றும் கழிவுகளை அகற்றும் இடங்களிலிருந்து கழிவுகளை வாழ்வாதரத்திற்காக சேகரித்து அவைகளை நேரடியாகவோ அல்லது இடையீட்டாளர்கள் மூலமாகவோ மறுசுழற்சி செய்பவர்களுக்கு உதவும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள தனி நபர்கள் அல்லது ஒரு குழுவாக செயல்படுபவர்களை குறிக்கும்.

**4.0 திடக்கழிவுகளை உருவாக்குவோர் கடமைகள்**

(1) திடக்கழிவுகளை உருவாக்கும் ஒவ்வொரும்

(i) அவர்களால் உருவாக்கப்படும் கழிவுகளை, மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் அபாயகரமான வீட்டு உபயோக கழிவுகள் என்று தரம் பிரித்து அவற்றை அவற்றிற்குரிய குப்பை தொட்டிகளில் தனித்தனியே சேர்த்து வைத்து, அவ்வப்போது சென்னை மாநகராட்சியினால் அறிவிக்கப்படும் அறிவுரைகள் அல்லது அறிவிப்புகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் மீட்டெடுப்பவர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிப்பவர்களிடம் தனித்தனியே ஒப்படைக்க வேண்டும்.

(ii) சுகாதார கெடுதல் கழிவுகளான பயன்படுத்தப்பட்ட அணையாடைகள், சுகாதார அணையாடைகள் ஆகிய கழிவுகளை பாதுகாப்பாக தனியே உறையிட்டு அல்லது அவைகளின் தயாரிப்பவர்களால் அல்லது வணிக

உரிமையாளர்களால், அளிக்கப்படும் உறையில் போட்டு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அறிவித்துள்ள முறைகளின்படி பொருத்தமான முறையில் மறைத்து கட்டி அவைகளை உலர் கழிவுகள் அல்லது மக்காத கழிவுகளுக்கான குப்பை தொட்டியில் போட வேண்டும்.

(iii) அவ்வப்போது உருவாகும் கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள், உரியவர்களின் சொந்த இடத்திலேயே சேர்த்து வைக்கப்பட வேண்டும். மேலும் அவைகள் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் விதி, 2016-ல் சொல்லப்பட்டுள்ள வழிவகைகளின்படி அகற்றப்பட வேண்டும்.

(iv) உருவாக்கப்படும் தோட்டக்கலை மற்றும் தோட்டக்கழிவுகள், உரியவர்களின் இடத்திலேயே தனியே சேர்த்துவைக்கப்பட்டு அவை, சென்னை மாநகராட்சி அவ்வப்போது வழங்கும் அறிவுறுத்தல்களின்படி அகற்றப்பட வேண்டும்.

(2) கழிவுகளை உருவாக்கும் எவரும், அவரால் உருவாக்கப்பட்ட கழிவுகளை, அவரது கட்டிடத்திற்கு வெளியில் உள்ள சாலைகளிலோ, திறந்தவெளி பொது இடங்களிலோ, வடிகால் அல்லது நீர்நிலைகளிலோ, வீசவோ, புதைக்கவோ அல்லது எரிக்கவோ கூடாது.

(3) கழிவுகளை உருவாக்கும் அனைவரும் திடக்கழிவு மேலாண்மைக்காக சென்னை மாநகராட்சி துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளர் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

(4) சென்னை மாநகராட்சிக்கு குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்கு முன்னரே தெரிவிக்காமல், எந்த ஒரு நபரும், நூறு நபர்களுக்கு மேல் கூடும் நிகழ்ச்சியினை அல்லது கூட்டத்தை உரிமம் இல்லாத இடத்தில் ஏற்பாடு செய்யக்கூடாது. மேலும் அந்த நபர், அல்லது அந்த நிகழ்ச்சியின் அமைப்பாளர், அங்கு உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து, அவ்வாறு தரம்பிரிக்கப்பட்ட கழிவுகளை சென்னை மாநகராட்சி அமைப்பினால் குறிப்பிடப்பட்டுள்ள கழிவு சேகரிப்பவரிடம் அல்லது முகமை அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும்.

(5) ஒவ்வொரு தெரு வணிகரும், அவரின் வணிகத்தின் போது உருவாகும், உணவு கழிவுகள், ஒருமுறை பயன்படுத்தப்படும் தட்டுகள், கோப்பைகள், கொள்கலங்கள், உறைகள், தேங்காய் சிரட்டைகள், எஞ்சிய உணவுகள், காய்கறிகள், பழங்கள் போன்ற இன்ன பிற கழிவுகளை சேர்த்து வைக்க அதற்கென உரிய கொள்கலங்களை வைத்து அதில் அவைகளை சேகரித்து வைத்து சென்னை மாநகராட்சி அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திடக்கழிவுகளை சேகரிக்கும் நிலையம், கொள்கலன் அல்லது வாகனத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

(6) அனைத்து குடியிருப்போர் நல சங்கங்களும் மற்றும் வணிக சங்கங்களும், இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஓராண்டிற்குள், உள்ளாட்சி அமைப்புகளுடன் கூட்டாக

இணைந்து, இந்த விதிகளில் சொல்லப்பட்டுள்ளவாறு திடக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே அவைகள் தரம் பிரிப்பதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகள் தனித் தனியாக சேகரிக்கப்பட வேண்டும். மறுசுழற்சிக்குகந்த பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் மீட்டெடுப்பவர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மக்கும் குப்பைகள், பதனிடுதலுக்கு, சுத்திகரிக்கப்படுவதற்கு மற்றும் அகற்றப்படுவதற்கு, அவர்களின் வளாகத்திற்குள்ளேயே உரமாக்குதல் , உயிரியல் ரீதியில் மக்கவைத்து உரமாக்குதல் ஆகியவைகளுக்கு உட்படுத்த வேண்டும். இந்த செயல்பாட்டியல் எதற்கும் பயன்படா எச்சங்கள் சென்னை மாநகராட்சி அறிவுறுத்தலுக்கேற்ப அதற்கென உள்ள கழிவுகளை சேகரிப்பவரிடம் அல்லது முகமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(7) நுழைவு கட்டுப்பாட்டு குடியிருப்புகள் 5,000 சதுர மீட்டருக்கு மேல் பரப்பளவு கொண்ட சமுதாய கட்டடங்கள் மற்றும் நிறுவனங்களின் கட்டடங்கள், இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஓராண்டிற்குள் சென்னை மாநகராட்சியுடன் கூட்டாக இணைந்து, இந்த விதிகளில் சொல்லப்பட்டுள்ளவாறு கழிவுகள் உருவாகும் இடத்திலேயே அவைகள் தரம் பிரிப்பதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை தனித் தனியாக சேகரிக்க வேண்டும். மறுசுழற்சிக்குகந்த பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் சேகரிப்பவர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். மக்கும் குப்பைகள், பதனிடுதலுக்கு, சுத்திகரிக்கப்படுவதற்கு மற்றும் அகற்றுவதற்கு, அவர்களின் வளாகத்திற்குள்ளேயே உரமாக்குதல், உயிரியல் ரீதியில் மக்க வைத்து உரமாக்குதல் ஆகியவைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த செயல்பாட்டில் எதற்கும் பயன்படாத எச்சங்கள் சென்னை மாநகராட்சி அறிவுறுத்தல்களுக்கேற்ப அதற்கென உள்ள திடக்கழிவுகளை சேகரிப்பவரிடம் அல்லது முகமை அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும்.

(8) அனைத்து உணவகங்களும் உணவுக் கிடங்குகளும் இந்த விதிகள் வெளியிடப்பட்ட ஓராண்டிற்குள், சென்னை மாநராட்சியுடன் கூட்டாக இணைந்து, இந்த விதிகளில் செய்யப்பட்டுள்ளவாறு கழிவுகள் உருவாகும் இடத்திலேயே அவைகள் தரம் பிரிப்பதை உறுதி செய்ய வேண்டும் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை தனித் தனியாக சேகரிக்கப்பட வேண்டும் மறுசுழற்சிக்குகந்த பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் சேகரிப்பவர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவகளிடம் ஒப்படைக்க வேண்டும். மக்கும் குப்பைகள், பதனிடுதலுக்கு சுத்திகரிக்கப்டுதலுக்கு மற்றும் அகற்றப்படுவதற்கு, அவர்களின் வளாகத்திற்குள்ளேயே உரமாக்குதல், உயிரியல் ரீதியில் மக்க வைத்து உரமாக்குதல் ஆகியவைகளுக்கு உட்படுத்த வேண்டும். இந்த செயல்பாட்டில்

எதற்கும் பயன்படாத எஞ்சிய கழிவுகள் சென்னை மாநகராட்சி அறிவுறுத்தல்களுக்கேற்ப அதற்கென உள்ள திடக்கழிவுகளை சேகரிப்பவரிடம் அல்லது முகமை அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும்.

(9) காகிதம், தண்ணீர் பாட்டில்கள், போதை திரவ பாட்டில்கள், மென்பான தகர டப்பாக்கள், நீர் உறியா அட்டைபெட்டிகள், பழச்சக்கைகள், பொருள்களை மடித்து வைக்கும் உறைகள் போன்ற எந்த ஒரு கழிவினையும், சாலையில் திறந்த வெளி பொது இடத்தில், வடிகால்களில், நீர்நிலைகளில், வீசியெறியவோ, கொளுத்தவோ, புதைக்கவோ கூடாது. மேலும் கழிவுகளில் உருவாகும் இடத்திலேயே திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ல் சொல்லப்பட்டுள்ளவாறு தரம் பிரித்து சென்னை மாநகராட்சி அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவர்கள் அல்லது கழிவு சேகரிப்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

## 5.0 சென்னை மாநகராட்சியின் பொறுப்புகள்:

1. குடிசைப்பகுதிகள் மற்றும் முறைசாரா குடியேற்ற பகுதிகள் வணிக நிறுவன மற்றும் பிற குடியிருப்பு சாரா கட்டடங்களிடமிருந்தும் தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை வீட்டுக்கு வீடு சென்று சேகரிக்க வேண்டும். பன்னடுக்கு கட்டடங்கள், பெரிய வணிக வளாகங்கள், மற்றும் பெரிய கடைகள், குடியிருப்பு வளாகங்கள் போன்ற பிற நிர்ணயிக்கப்பட்ட இடங்களிலிருந்தும் அவைகளின் வாயில் தோறும் சென்று தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை சேகரிக்க வேண்டும்.

2. திடக்கழிவுகள் மீட்டெடுப்பவர்களின் முறைசாரா திடக்கழிவுகள் சேகரிப்பவர்களின் அமைப்பு முறையினை சீரமைக்க ஒரு நடைமுறையினை உருவாக்க வேண்டும். மேலும் இந்த அங்கீகரிக்கப்பட திடக்கழிவு மீட்டெடுப்பவர்கள் மற்றும் கழிவுகளை சேகரிப்பவர்களை ஒருங்கிணைந்து ஒரு அமைப்பினை ஏற்படுத்தி வீட்டுக்கு வீடு சென்று திடக்கழிவுகளை அகற்றுவதில் திடக்கழிவு மேலாண்மையில் அவர்களின் பங்கேற்பினை செயல்படுத்த / வளர்த்தெடுக்க வேண்டும்.

3. சுய உதவிக் குழுக்களை நிர்மாணித்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்க வேண்டும். பின்னர் வீட்டுக்கு வீடு சென்று திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒன்றிணைக்க ஊக்கம் அளிக்க வேண்டும்.

4. அட்டவணையில் சொல்லப்பட்டுள்ளவாறு பயனாளர் கட்டணத்தை நிர்ணயித்து அதில் அவ்வப்போது உரிய திருத்தங்கள் மற்றும் மாற்றங்களை

மேற்கொள்ள வேண்டும். மேலும் பயனாளர் ஒவ்வொரு அரையாண்டின் முதல் பதினைந்து நாட்களில் சொத்துவரிகளுடன் சேர்த்து கட்டணத்தை பயன்படுத்துபவர்கள் அவர்களாகவே அதை செலுத்துமாறு செய்ய வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகமை அமைப்பின் மூலம் வசூலிக்க வேண்டும்.

5. முறைசாரா அங்கீகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை சேகரிப்பவர்களுக்கு மறுசுழற்சி கழிவுகளை தனியே பிரித்தெடுப்பதற்கும் மறுசுழற்சிக்குட்படுத்தக் கூடிய கழிவுகளை பயன்படுத்தி பிரித்தெடுக்க போதுமான இடவசதியுடன் மீட்கக்கூடிய பொருட்களை மீட்டெடுப்பதற்கு கட்டமைப்பு வசதியை அல்லது இரண்டாம் நிலை கழிவுகள் சேர்த்து வைக்கும் வசதிகளும் ஏற்படுத்தி தர வேண்டும். மேலும் அந்த கழிவுகளை பொறுக்குபவர்களுக்கு அல்லது மறுசுழற்சி செய்பவர்களுக்கு காகிதம் பிளாஸ்டிக், உலோகம், ,கண்ணாடி, ஜவுளி போன்ற மறுசுழற்சிக்குட்படுத்தக் கூடிய பொருட்களை அவைகள் உருவாகும் இடத்திலிருந்து அல்லது பொருட்களை மீட்டெடுக்கும் கட்டமைப்பு வசதியிலிருந்து சேகரிக்க எளிதான அணுகு முறையினை அளிக்க வேண்டும். மக்கும் கழிவுகளை சேர்த்து வைக்கும் தொட்டிகளுக்கு பச்சைநிற வர்ணமும் மறுசுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுகளை சேர்த்து வைக்கும் தொட்டிகளுக்கு வெள்ளை நிறவர்ணமும் பிற வகை கழிவுகளை சேர்த்து வைக்கும் தொட்டிக்கு கருப்பு நிற வர்ணமும் பூச வேண்டும்.

6. இல்லங்களில் உருவாகும் அபாயகரமான கழிவுகளை ஒப்படைப்பதற்கு கழிவுகள் பெறும் மையத்தினை நிர்மாணிக்க வேண்டும். (ஒவ்வொரு இருபது சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பகுதிக்கும் ஒரு மையம் என்று அமைத்து அதன் நேர விவரங்களை அறிவிக்கை மூலம் தெரிவிக்க வேண்டும்) மேலும், இல்லங்களில் உருவாகும் இந்த அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றிட இந்த மையங்களில் ஒப்படைக்க வேண்டும் என்று திடக்கழிவுகளை உருவாக்குபவர்களுக்கு கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும்.

7. கழிவுகளை மீட்டெடுப்பவர்களுக்கும் கழிவுகளை சேகரிப்பவர்களுக்கும் திடக்கழிவு மேலாண்மையில் பயிற்சி அளிக்க வேண்டும்.

8. காய்கறி, பழம், மலர், இறைச்சி, கோழி மற்றும் மீன் அங்காடிகளிலிருந்து கழிவுகளை தினசரி அகற்ற வேண்டும். மேலும் பொருத்தமான இடங்களில் பன்முகப்படுத்தப்பட்ட உரம் தயாரிக்கும் தொழிலகம் அல்லது உயிரியல் ரீதியில் மக்கவைக்கும் தொழிலகத்தை நிறுவ வேண்டும்.

9. மக்கள் நெருக்கம், வணிகங்களின் பரிமானம் மற்றும் நடப்பு களநிலை ஆகியவைகளை பொறுத்து தினந்தோறும் அல்லது ஒன்று விட்டு ஒரு நாள், அல்லது வாரம் இருமுறை தெருக்களை சந்துகளை சார்-சந்துகளை பெருக்கி திடக்கழிவுகளை தனித்தனியாக சேகரிக்க வேண்டும்.

10. பூந்தோட்டங்கள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் உருவாகும் கழிவுகளை இயன்ற வரையில் அந்த பூங்காக்கள் மற்றும் தோட்டங்களிலேயே பதனிடுதலுக்கு உட்படுத்த வேண்டும்.

11. தரம் பிரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை, கழிவுகளை உரமாக்கும் தொழிலகம் அல்லது மக்கவைக்கும் தொழிலகம் ஆகிய பதனிடுதல் வசதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும் இத்தகைய கழிவுகள் அவைகள் உருவாகும் இடத்திலேயே பதனிடுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

12. மக்காத கழிவுகளை அவற்றிற்கான பதனிடுதல் கட்டமைப்பு வசதிகளுக்கு அல்லது பொருட்களை மீட்டெடுக்கும் கட்டமைப்பு வசதிக்கு அல்லது இரண்டாம் கட்ட சேர்த்து வைக்கும் கட்டமைப்பு வசதிக்கு எடுத்து செல்ல வேண்டும்.

13. கட்டுமான மற்றம் இடிபாட்டுக் கழிவுகள் கட்டுமான மற்றும் இடிபாட்டுக் கழிவு விதிகள் 2016ன் வழிவகைகளின்படி எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

14. கழிவுகள் மேலாண்மையில் தன்னார்வ குழுக்களை ஈடுபடுத்துதல் மற்றும் கழிவுகளை உருவாகுமிடங்களிலேயே உரமாக்குதல், மக்கும் கழிவிலிருந்து உயிரி எரிவாயு தயாரித்தல், துர்நாற்றமின்றி இந்த கட்டுமான வசதியினை சுற்றி சுகாதாரமான நிலையில் பராமரித்தல் ஆகியவைகளுக்கு உட்பட்டு பன்முகப்பபடுத்தப்பட்ட பதனிடுதல் வசதிகளை அனைத்து மக்களும் பயன்படும் வண்ணம் நிறுவ வேண்டும்.

15. இரசாயன உரங்களை பயன்படுத்துவதை படிப்படியாக குறைத்து அதன் உபயோகத்தை இரண்டாண்டுகளில் முழுவதுமாக நிறுத்தி சென்னை மாநகராட்சியினால் அதன் ஆட்சி எல்லைக்குள் பராமரிக்கப்படும் அனைத்து பூங்காக்களிலும் மற்றும் தோட்டங்களிலும் மற்றும் இன்ன பிற இடங்களிலும் எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் தழையுரத்தை பயன்படுத்த வேண்டும்.

16. திடக்கழிவுகளின் பல்வேறு கூறுகளை அதிகபட்சமாக பயன்படுத்த திடக்கழிவு மேலாண்மை பதனிடுதல் விதிகளை மற்றும் அதனுடன் சேர்ந்த உள்கட்டமைப்புகளை கீழ்வரும் தொழில்நுட்பம் உட்பட பொருத்தமான

தொழில்நுட்பத்தை பின்பற்றி மற்றும் நகர வளர்ச்சி அமைச்சகத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டல்கள் மற்றும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தரங்களை கடைபிடித்து, அவர்கள் தங்களுக்கு சொந்தமானதாகவோ அல்லது தனியார் துறையின் பங்களிப்பின் மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் முகமை அமைப்பு மூலமாகவோ நிர்மானித்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். கழிவுகளை வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்ல ஆகும் செலவினத்தை குறைக்கவும் மற்றும் சுற்றச்சூழலுக்கு எற்படும் பாதிப்பினை குறைக்கவும் கீழ்கண்டுள்ள வழிமுறைகளை பயன்படுத்த வேண்டும். (அ) மக்கும் கழிவுகளை மக்க வைத்தல், நுண்ணுயிர் சார்ந்து உரமாக்குதல், மண்புழு கொண்டு உரமாக்குதல், பிராணவாயு இல்லாத நிலையில் மக்க வைத்து செரிமானம் அடையச் செய்து உரமாக்குதல், அல்லது அதில் உள்ள ஊறுவிளைவிக்கும் தன்மையை நீக்கி நிலைப்படுத்துதல்

(ஆ)கழிவுகளின் எரிதிறன் கூறிலிருந்து எரிபொருள் தயாரித்தல் உட்பட திடக்கழிவுகளிலிருந்து எரிசக்தி தயாரித்தல், அல்லது திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிலகங்களுக்கு அல்லது சிமெண்ட தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு எரிபொருளாக வழங்குதல் ஆகியவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

17. அவர்களாக அவர்களுக்கு சொந்தமானதாகவோ அல்லது ஏதேனும் ஒரு முகமை அமைப்பின் மூலமாகவோ இந்த விதிகளில் சொல்லப்பட்டுள்ளவாறு எஞ்சிய கழிவுகளை அகற்றவும் கழிவுகளை சுகாதாரமான முறையில் அகற்றும் வசதியினையும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிற உள்கட்டமைப்புகளையும் கட்டமைத்து இயக்கி பராமரிக்க வேண்டும்

18. ஆண்டு வரவு செலவு திட்டத்தின் திடக்கழிவு மேலாண்மை மூலதன பணிகளுக்கும் மற்றும் இயக்கம் பராமரிப்பு பணிகளுக்கும் தேவையான நிதியினை ஒதுக்க வேண்டும் அவ்வாறு திடக்கழிவு மேலாண்மைக்கும் மற்றும் இந்த விதிகளின் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கும் தேவையான நிதியை ஒதுக்கிய பின்னரே பிற தன் விருப்ப பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

19. விதிகளில் உள்ள படிவம்-1-ன்படி ஒவ்வொரு ஆண்டிற்கும் அது முடித்த அடுத்த ஆண்டில் ஜீன் 30 அல்லது அதற்கு முன்னால் ஆண்டு அறிக்கையினை முதன்மை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகியோருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

20. ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் வீட்டுக்கு வீடு சென்று தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை சேகரித்தல், மற்றும் கலப்பில்லாத கழிவுகளை முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையில் வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லுதல் மற்றும் அவைகளை பதனிடுதல் மற்றும் முடிவாக அகற்றும் கட்டமைப்பு கொண்டு செல்லுதல் ஆகியவைகளில் பின்பற்ற வேண்டிய முறைகள் குறித்து கற்பிக்கப்பட வேண்டும்.

21. ஒரு கட்டமைப்பினை இயக்குபவர் அல்லது தொழிலாளர்களுக்கு அவர்களை பாதுகாத்துக் கொள்ள உபகரணங்கள், சீருடைகள், ஒளிரும் மேலாடைகள், கையுறைகள், மழைக்கோட்டுகள், காலணிகள் ஆகியவைகளை வழங்குவதையும் மற்றும் அனைத்து பணியாளர்களும் பணி செய்யும் போது அவைகளை பயன்படுத்துவதையும் உறுதி செய்ய வேண்டும்.

22. வீட்டு சங்க குழுக்கள் அல்லது அங்காடி வளாகங்கள் ஆகியவற்றிற்கான கட்டட வரைபடத்திற்கு அனுமதி அளிக்கும்போது அந்த கட்டடத்திற்கான நகரமைப்பு திட்டத்தில் திடக்கழிவுகளை சேகரிக்கவும், தரம் பிரிக்கவும் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை சேர்த்து வைக்கவும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்று உறுதி செய்ய வேண்டும்.

23. தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சார கூட்டங்களின் மூலம் பொதுமக்களிடையே திடக்கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். மேலும் கீழ்வரும் இனங்களைப்பற்றி திடக்கழிவுகளை உருவாக்குபவர்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

(i) கழிவுகளை ஒழுங்கின்றி கண்ட இடங்களில் போடாதிருத்தல்

(ii) கழிவுகள் உருவாவதை வெகுவாக குறைத்தல்

(iii) இயன்ற வரையில் திடக்கழிவுகளை மறுபயன்பாட்டிற்கு உட்படுத்துதல்

(iv) வீடுகள்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை அவ்விடத்திலேயே மக்கக்கூடிய கழிவுகள், மக்காத கழிவுகள் (மறுசுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய மற்றும் எரியும் தன்மை கொண்ட), சுகாதார கழிவுகள் மற்றும் இல்ல அபாயகரமான கழிவுகள் என்று தரம் பிரிப்பதை கடைபிடித்தல்

(v) உருவாகும் நிலையிலேயே கழிவுகள் உரமாக்குதல் மண்புழு கொண்டு உரமாக்குதல் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரித்தல் அல்லது சமுதாய நிலையில் உரம் தயாரித்தல் ஆகியவைகளை கடைபிடித்தல்

(vi) சுகாதார கெடுதல் கழிவுகளை, அவைகளை உருவாகும் போதேபாதுகாப்புடன் அவற்றை வணிக சின்ன உரிமையாளர்களால் வழங்கப்படும் பைகளில் வைத்தல் அல்லது உள்ளாட்சி அமைப்புகளினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாதுகாப்பாக கட்டி மக்காத கழிவுகளுக்கான தொட்டியில் போடுதல்

(vii) தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை வெவ்வேறு தொட்டிகளில் சேர்த்து வைத்தல்:

(viii) தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை திடக்கழிவுகள் மீட்டெடுப்பவர்கள் திடக்கழிவுகள் சேகரிப்பவர்கள், மறுசுழற்சி செய்பவர்கள் அல்லது கழிவுகள் சேகரிப்பு முகமை அமைப்புகளிடம் ஒப்படைத்தல் மற்றும்

(ix) திடக்கழிவு மேலாண்மை நீடித்து நிலைத்து செயல்பட மாதாந்திர பயனாளர் கட்டணத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மற்றும் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு நபருக்கும் செலுத்துதல்.

24. துணை விதிகள் 5 பிரிவு 17ல் விவரித்துள்ளபடி சுகாதாரமான முறையில் திடக்கழிவுகளை அகற்றும் தளம் நிர்மாணிக்கப்பட்டு இயக்கத்திற்கு வந்தவுடன் கழிவுகளை அல்லது கலப்பு கழிவுகளை நிலத்தில் நிரப்பும் செயல்பாடுகளை நிறுத்துதல்;

25. பயன்படுத்த இயலாத மறுசுழற்சிக்கு உட்படுத்த இயலாத மக்காத, திறனற்ற மற்றும் எதிர்வினையாற்றாத எதற்கும் பயன்படாத கழிவுகள் மற்றும் பதனிடுதலுக்கு உட்படுத்தப்பட இயலாது என்று நிராகரிக்கப்பட்ட திடக்கழிவுகள் மற்றும் பதனிடுதல் முறையில் எஞ்சிய திடக்கழிவுகள் ஆகியவைகளை மட்டும் திடக்கழிவுகளை சுகாதாரமான முறையில் அகற்றும் கட்டமைப்பு வசதிகளில் அனுமதிக்க வேண்டும். மேலும் சுகாதாரமான முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான வளாகங்கள் அதற்குண்டான தொழில்நுட்பத் தரத்தினை கொண்டிருக்க வேண்டும். இருப்பினும் கழிவுகளை அகற்றுவதற்கான வளாகத்திற்கு கழிவுகளே செல்லாத நிலையினை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை அடைய நிராகரிக்கப்படும் கழிவுகளை மறு சுழற்சி அல்லது மறு உபயோகத்திற்கு உட்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

26. திடக்கழிவுகளை கொட்டும் செயல்பாடுகள் நிறுத்தப்பட்ட அனைத்து பழைய வளாகங்களையும் பயன்பாட்டில் உள்ள திடக்கழிவுகளை களையும் வளாகங்களையும் அவைகளில் உள்ள ஏற்கனவே கொட்டப்பட்ட உயிரி கழிவுகளை அகழ்ந்தெடுத்தல் அல்லது அவைகளை சீரமைக்கும்

சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்து அதன்படி அகழ்ந்தெடுக்கும் அல்லது சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

27. அவ்வாறு திடக்கழிவுகள் கொட்டப்பட்ட இடங்கள் அகழ்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது அறிவியல் ரீதியில் சீரமைக்கப்படுவதற்கோ உகந்ததாக இல்லாவிட்டால் சுற்றுச்சூழல் மேற்கொண்டும் பாதிக்கப்படாமல் இருக்க திடக்கழிவுகள் கொட்டப்பட்ட தளங்களின் மேற்புறம் அறிவியல் ரீதியில் மூடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

28. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ன்படி கழிவு பதப்படுத்துதல், சுத்திகரிப்பு அல்லது அகற்றும் வசதி ஆகியவற்றை அமைப்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து அங்கீகாரம் பெற படிவம்-1-ல் விண்ணப்பம் செய்யவேண்டும்.

29. அங்கீகாரம் காலாவதியாவதற்கு குறைந்தபட்சம் அறுபது நாட்களுக்கு முன்னர் அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

30. பயன்படுத்தப்பட்ட சுகாதாரக் கழிவுகளான டயப்பர்கள், சானிட்டரி பேட்கள் போன்றவை சேகரிக்கப்பட்டு பொருத்தமான உறையில் இடப்பட்டு அகற்றுவதற்கான ஏற்பாடுகள் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

31 உரத்தின் தரம், சுத்திகரிக்கப்பட்ட திரவக்கழிவுகள், நிலத்தடி நீர், சுற்றுப்புற காற்று மற்றும் எரித்தல் ஆகியவற்றை திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சுற்றுச்சூழல் அளவுருக்கள் கண்காணிக்கப்பட வேண்டும்.

32. உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகள், 2016 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட விதிகளின்படி உயிரி மருத்துவ கழிவுகள் அகற்றப்பட வேண்டும்.

33. மின்-கழிவு மேலாண்மை விதிகள், 2016 மற்றும் அவ்வப்போது திருத்தப்படும் விதிகளின் படி மின்-கழிவுகள் நிர்வகிக்கப்பட வேண்டும்.

## 5.1 அபராதங்கள் விதித்தல்

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ன் படி செயல்படாதவர்களின் மீது துணை விதிகள் அட்டவணை-IV-ல் தெரிவித்துள்ளபடி அபராதம் விதிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி வார்டு உதவி பொறியாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**6.0 சென்னை மாநகராட்சியின் கடமைகளும் பொறுப்புகளும்**

(1) **குடிமக்களுக்கான வலைதளம்:** அடிப்படை ஆதார விவரங்கள் சென்னை மாநகராட்சியின் நியமிக்கப்பட்ட அலுவலர், குடிமக்கள் மறுசுழற்சிக்கு உகந்த திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்ய உதவியாக திடக்கழிவுகளை உருவாக்குவதில் வல்லுநர்கள், உரிமம் பெற்ற பழையஉலோகங்களை வாங்கும் வியாபாரிகள் மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை வாங்கும் வியாபாரிகள் கொள்கலங்கள்/தொட்டிகள் தயாரிப்பவர்கள் மற்றும் மறுசுழற்சியில் வல்லமை பெற்ற முகமை அமைப்புகள் மற்றும் இன்ன பிற சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பட்டியலை தயாரித்து வெளியிட வேண்டும். அலுவலர்களின் பெயர் மற்றும் அவர்களின் தொலைபேசி எண்கள் இந்த செயல்பாடுகளில் பயிற்சி அளித்தல் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவைகளில் அனுபவம் பெற்ற பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள்அமைப்புகள் ஆகியவைகள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். இந்த விவரங்கள் சென்னை மாநகராட்சியில் இணையதளத்தில் இருக்குமாறு செய்ய வேண்டும்.

(2) **திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான பயனாளி மற்றும் வணிக கழிவுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்:** இந்திய அரசின் நகர வளர்ச்சி அமைச்சகத்தின் கட்டளைகளின்படி சென்னை மாநகராட்சியின் மாமன்றம் 18.05.2018 நாளிட்ட தீர்மானம் எண். 397/2018ல் பொதுமக்களிடமிருந்தும் கழிவுகளை உருவாக்குபவர்களிடமிருந்தும் திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை இயக்குவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு ஆகும் செலவினத்திற்காக பயனாளர் கட்டணங்களை விதிக்க தீர்மானித்துள்ளது. (அட்டவணை - I) மேலும் உணவு விடுதிகள், உணவுக் கூடங்கள், மற்றும் பிற கழிவுகளை உருவாக்குபவர்களுக்கு பொருந்தக்கூடிய வணிக திடக்கழிவு கட்டணத்தினை சென்னை மாநகராட்சி முறைப்படுத்தும். இதன் மூலம் இந்த கட்டணங்கள் திடக்கழிவுகளை உருவாக்கும் நபருக்கு வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு உரிமத்திற்கும் வசூலிக்கப்படும் கட்டணத்துடன் சம்பந்தப்படுத்தப்படாமல் அந்த தகவல்கள் அனைத்து வார்டு சுகாதார அலுவலகங்களிலும் மற்றும் சென்னை மாநகராட்சியின் இணையதளத்திலும் வெளியிடப்படும்.

(3) **வழிபாட்டுத்தலங்கள் மற்றும் இறுதி சடங்குகளில் உருவாகும் மக்கக்கூடிய திடக்கழிவுகள்:**

ஒவ்வொரு வார்டுக்கும் நியமனம் செய்யப்பட்ட அலுவலர் அவராகவோ அல்லது விருப்பமுள்ள அமைப்புகளை அங்கீகரிப்பதன் மூலமாகவோ, கடற்கரைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் பிற நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் அறிவிப்பில்

சொல்லப்பட்டுள்ளவாறு தனி பெட்டகங்கள் அல்லது பொது திடக்கழிவு கொள்கலன்களிலிருந்து மலர் கழிவுகள், இலைகள், பழங்கள் மற்றும் பிற மக்கும் கழிவுகளை சேகரிக்க வேண்டும்.

(4) **நேர அட்டவணை மற்றும் திடக்கழிவுகள் சேகரிப்பு பாதை**: திடக்கழிவுகள் சேகரிக்கப்படும் தினசரி மற்றும் வாராந்திர நேர அட்டவணை மற்றும் (அ) மக்கக்கூடிய திடக்கழிவுகள் (ஆ) மறுசுழற்சிக்கு உகந்த மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகள் (உலர் கழிவுகள்) மற்றும் (இ) இல்லங்களில் உருவாகும் அபாயகரமான திடக்கழிவுகள், வெவ்வேறு வகையான நகராட்சி கழிவுகளை அகற்ற வாகனங்கள் வரும் வாகனப்பாதை ஆகியவைகள் நிர்ணயிக்கப்பட்டு முன்னதாகவே ஆணையரால் அறிவிக்கப்படும். இந்த விவரங்கள் அனைத்து வார்டு அலுவலகங்களிலும் மற்றும் மாநகராட்சியின் இணைய தளத்திலும் வெளியிடப்பட வேண்டும். இது போலவே, கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள், தோட்ட மற்றும் பூந்தோட்ட கழிவுகள் தொடர்பான விவரங்களும் மாநகராட்சி மற்றும் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகமை அமைப்புகளின் திட்டப்பொறியாளரால் சம்பந்தப்பட்ட பொறுப்பு அலுவலர் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் திடக்கழிவுகளை மொத்தமாக உருவாக்குபவர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

(5) **திடீர் சோதனைகள்**: இந்த துணை விதிகளில் வழிவகைகள் கடைபிடிக்கப்படுவதை, ஊக்குவிக்க, ஆணையர் அல்லது ஆணையரால் இதற்கென அதிகாரம் / அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்ட அலுவலர் வார்டுகளின் பல்வேறு பகுதிகளில் எந்த நேரத்திலும் (பகல் அல்லது இரவு) திடீர் சோதனைகளை நடத்துவார். எந்த ஒரு விதி மீறலும் தண்டனைக்குரியது.

(6) **வார்டு அமலாக்க படை**: ஆணையர், தொல்லைகளை கண்டறியும் அலுவலர்களை நியமிப்பார். மேலும் அவர் திடக்கழிவு மேலாண்மை சேவைகளுக்கான அமலாக்கப்படையினை நிர்மாணிப்பர். நியமனம் செய்யப்பட்ட அலுவலர், தொந்தரவு கண்டறியும் அலுவலர்கள் மற்றும் அமலாக்கப்படையினை மேற்பார்வை செய்வார்.

(7) **விளம்பரம்**: குடிமக்கள் தகவல் சேவைகள். இந்த துணை விதிகளின் வழிவகைகளை விளம்பர பலகைகள், விளம்பரங்கள், துண்டுபிரசுரங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் அறிவிப்பு, செய்தித்தாள்களில் செய்தியாக வெளியிடல் மற்றும் இன்ன பிற பொருத்தமான சாதனங்களின் மூலம், மாநகராட்சி அறிவிக்க வேண்டும். இதன் மூலம் குடிமக்கள் அனைவரும் தங்களின் கடமைகளையும் மற்றும் மாநகராட்சியின், மறுசுழற்சி, கழிவுகள் மற்றும் திடக்கழிவுகளுக்கெதிரான சேவைப்பணிகள் மற்றும் அபராதங்கள் அவைகளைப் பற்றி தெரிந்து கொள்ளும் வாய்ப்பினை பெறுவார்கள்.

(8) **அரசு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்:** மாநகராட்சி, பிற அரசு முகமை அமைப்புகள் மற்றும் ஆட்சிக்குழுமங்கள், ஆகியவைகளுடன் அவர்களுக்குரிய ஆட்சி எல்லைக்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் வரும் பகுதிக்குள் இந்த துணை விதிகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

(9) ஆணையர் / நியமன அலுலவர் திடக்கழிவு மேலாண்மை சேவைப்பணிகள் முழுமையாக வழங்கப்படாத குடிசைப்பகுதிகளை தத்து எடுக்கும் திட்டத்தை, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயலாக்க தகுதி பெற்ற சமுதாய அமைப்புகள் / அரசுசாரா அமைப்புகள், தன்னார்வ சேவை நிறுவனங்கள் / சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும்.

(10) மாநகராட்சியினது, வார்டு உறுப்பினர்கள், குடிமக்கள் சங்கங்கள், அரசு அமைப்புகள், கூட்டாண்மை அமைப்புகள், அரசுசாரா அமைப்புகள் ஆகியவைகளுடன் இணைந்து, குடிசைப்பகுதிகளை தத்து எடுப்பதில் பங்கேற்கும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளுடன் சேர்ந்து, அவ்வப்போது தூய்மைப்பணிகளை மேற்கொள்ளும் திட்டங்களை குடிசைப்பகுதிக்குள் சென்று செயலாக்க வேண்டும்.

7.0 **இறைச்சிக்கூடங்கள் மற்றும் இறைச்சி, மீன் அங்காடி கழிவுகள்:**

(1) நிர்ணயிக்கப்பட்டுள்ள இறைச்சிக்கூடங்கள் மற்றும் அங்காடிகள் நீங்கலாக, கோழி, மீன் மற்றும் இறைச்சி கழிவுகளை உருவாக்கும் ஒவ்வொரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது அதில் குடியிருப்பவர்கள், அவைகளை தனியாக சுகாதாரமான நிலையில் சேர்த்து வைத்து அதற்கென குறித்த நேரங்களில் தினசரி அடிப்படையில் அவைகளை சேகரிப்பதற்காக வரும் மாநகராட்சியின் சேகரிப்பு வாகனங்களில் ஒப்படைக்க வேண்டும். அத்தகைய கழிவுகளை எந்த ஒரு பொது திடக்கழிவு தொட்டியிலும் போடுவது தடைசெய்யப்படுகிறது. மேலும் அத்தகைய செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ள அபராத அட்டவணைப்படி அபராதம் விதிக்கப்படதக்கது.

(2) **விற்பவர் / கூவி விற்பவர்**

அனைத்து வியாபாரி / கூவி விற்பவர், அவர்களது வியாபார நடவடிக்கையின் போது உருவாகும் அவர்களது மக்கக்கூடிய மற்றும் கலப்பு இல்லாத பிற கழிவுகளை அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்திலேயே கொள்கலங்களில் / தொட்டிகளில் சேர்த்து வைக்கவேண்டும். இந்த கழிவுகள் தரம் பிரிக்கப்பட்ட முறையில் கொள்கலம் பொருத்தப்பட்டுள்ள மாநகராட்சியின் கைவண்டிகளில் அல்லது மிகவும் அருகாமையில் உள்ள இதற்கென தனியாக கழிவுகள் சேர்த்து வைக்கும் சமுதாய கழிவுகள் தொட்டியில் போடவேண்டியது இந்த கழிவுகளை உருவாக்குபவரின் / வியாபாரியின்

பொறுப்பாகும். இதனை செய்ய தவறுவது, அபராத அட்டவணைப்படி அபராதங்கள் விதிக்கப்படுவதற்கு உரியதாகும். ஒவ்வொரு வியாபாரியும் / கூவி விற்பவரும், அவர் வியாபாரம் செய்யும் இடத்தை சுற்றியுள்ள பகுதியினை தூய்மையாக வைத்திருப்பது அவரின் பொறுப்பாகும்.

3) **வீட்டு வாய்க்கால்கள்**

வீட்டு வாய்க்காலில் கழிவுகள் போடப்படாமலிருப்பதை உறுதி செய்வது வீட்டு வாய்க்கால் கொண்ட ஒவ்வொரு கட்டடத்தின் உரிமையாளர் /குடியிருப்போரின் பொறுப்பாகும். மேலும் நகராட்சி திடக்கழிவுகளை தரம்பிரித்து அவைகளை மாநகராட்சியினால் / முகமை அமைப்பினால் அறிவிக்கப்பட்டுள்ள நேரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் வரும் குப்பை அகற்றுவதற்குரிய வாகனங்களில் ஒப்படைக்க வேண்டும். இதனை செய்ய தவறுவது, அபராத அட்டவணைப்படி அபராதங்கள் விதிக்கப்படுவதற்கு உரியதாகும்.

(4) **சொந்த/செல்லப்பிராணிகளால் உருவாகும் கழிவுகள்:**

சொந்த செல்லப்பிராணிகளால் தெருக்களில் அல்லது எந்த ஒரு பொது இடத்திலும் உருவாகும் கழிவுகளை அகற்றுவது / சுத்தம் செய்வது அதன் ஒவ்வொரு உரிமையாளரின் பொறுப்பாகும், அவ்வாறு உருவாகும் கழிவுகளை அவர்கள் தங்களது சொந்த கழிவுகள் அகற்றும் முறையின் மூலம் முறையாக அகற்ற வேண்டும், இதனை செய்ய தவறுவது, அபராத அட்டவணைப்படி அபராதங்கள் விதிக்கப்படுவதற்கு உரியதாகும்.

**8.0 இந்த துணைவிதிகள் மீறப்படுதலுக்கான அபராதங்கள்**

1. இந்த துணை விதிகள் அமுலுக்கு வந்த நாளிலிருந்து அல்லது அமுலுக்கு வந்த நாளுக்கு பிறகு, 30 நாட்கள் இதற்கான புரிதல் காலம் மற்றும் எச்சரிக்கை காலம் அளிக்கப்படுகிறது. அதன் பிறகு, இந்த துணை விதிகளை மீறினால், ஒவ்வொரு விதி மீறலும் அபராத அட்டவணையில் (அட்டவணை-IV) சொல்லப்பட்டுள்ளவாறு அபராதம் தண்டனையாக விதிக்கப்படுவதற்கு உரியதாகும். ஒரு வேலை கழிவுகளை உருவாக்குபவர் இதில் எந்த ஒரு துணை விதியினையும் அடுத்தமுறை மீறினால், அபராதத்தொகை இரண்டு மடங்காக இருக்கும்.
2. ஒரு வேளை, மாசு ஏற்படுத்தியவரால், இந்த துணைவிதிகளை மீறியதற்காக அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராதத்தொகையினை செலுத்த இயலாவிட்டால், அவர்மீது மாநகர காவல் சட்டம் மற்றும் மாவட்ட காவல்

சட்டம் / இந்திய தண்டனை சட்டம் மற்றும் பொருந்தக்கூடிய ஏனைய சட்டங்களின்படி குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

9.0 **தண்டனைகள்**

இந்த துணைவிதிகளின் வழிவகைகளை மீறும் எந்த ஒரு நபரும் அல்லது இந்த துணைவிதிகளை மீறும் 14 வயதிற்குட்பட்ட குழந்தை ஒன்றின் பாதுகாப்பாளரும் நடைமுறையில் உள்ள விதிகளின் படி தண்டனைக்குரியவர்களாக கருதப்படுவார்கள்.

10.0 **மேல்முறையீடு செய்வதற்கான உரிமை** :

இந்த திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள், 2016ல் பாதிக்கப்படும் எந்த ஒரு நபரும், ஆணையர் சென்னை மாநகராட்சி அவர்களிடம் மேல்முறையீடு செய்யலாம். இந்த துணை விதிகள் சென்னை மாநகராட்சியின் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பிறகு அமலுக்கு வரும்.

11.0 **நீதிமன்றங்களின் அதிகார வரம்பு:**

துணை விதிகளுக்கு எதிரான வழக்குகளை தாக்கல் செய்வதற்கு நீதிமன்ற அதிகார வரம்பு சென்னைக்கு மட்டுமே உள்ளது.

## அட்டவணை-I

## திடக்கழிவு மேலாண்மை துறை பயன்படுத்துவோர் கட்டணங்கள்

**(துணை விதிகள் 6(2)ல் காண்க)**

| வரிசை எண் | திடக்கழிவு உருவாக்கும் நிறுவனங்களின் விவரம் | ஒருமுறை அல்லது ஒரு மாதத்திற்கு | உபயோகிப்பாளர் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| **I. குடியிருப்புகள்** | | | |
| 1 | கட்டிட பரப்பளவு 500 ச.அடிக்கு குறைவாக உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 10.00 |
| 2 | கட்டிட பரப்பளவு 500 ச.அடிக்கு மேல் 1200 ச.அடிக்கு குறைவாக உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 25.00 |
| 3 | கட்டிட பரப்பளவு 1200 ச.அடிக்கு மேல் 2400 ச.அடிக்கு குறைவாக உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 50.00 |
| 4 | கட்டிட பரப்பளவு 2400 ச.அடிக்கு அதிகமாக உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 100.00 |
| **II. வணிகம்** | | | |
| **அ. திருமண மண்டபம்/திருமண அரங்கு** | | | |
| 1 | திருமண மண்டபம்/திருமண அரங்கு | | |
| | அ. 1000 கிலோ/ அளவிற்கு திடக்கழிவு உருவாக்கம் | ஒரு மாதத்திற்கு | 10,000.00 |
| | ஆ. 1000 கிலோ/ அளவிற்கு அதிகமாக திடக்கழிவு உருவாக்கம் | ஒரு மாதத்திற்கு | 15,000.00 |
| 2 | அரசு மற்றும் தனியார் சமூக | ஒரு மாதத்திற்கு | 1,000.00 |

| | | | |
|---|---|---|---|
| | நலக்கூடங்கள் | | |
| **ஆ. உணவு கூடங்கள்** | | | |
| 1 | **உயர்தர உணவு கூடங்கள்/விடுதிகள் (அனைத்து நட்சத்திர விடுதிகளும்)** | | |
| | அ. நாள் ஒன்றுக்கு சராசரியாக 1000 கிலோ/ அளவிற்கு திடக்கழிவு உருவாக்கம் (சராசரியாக) | ஒரு மாதத்திற்கு | 3,000.00 |
| | ஆ. நாள் ஒன்றுக்கு சராசரியாக 1000 கிலோ/ அளவிற்கு மேல் திடக்கழிவு உருவாக்கம் | ஒரு மாதத்திற்கு | 5,000.00 |
| 2 | **முதல் தர உணவு கூடங்கள்/விடுதிகள்(உயர் வகுப்பு பகுதியில் அமைந்துள்ள நட்சத்திர வகுப்பு அல்லாதவை)** | | |
| | அ. சராசரியாக 1000 கிலோ/நாள் ஒன்றுக்கு திடக்கழிவு உருவாக்கம் (சராசரியாக) | ஒரு மாதத்திற்கு | 1,000.00 |
| | ஆ. சராசரியாக 1000 கிலோ/நாள் ஒன்றுக்கு மேல் திடக்கழிவு உருவாக்கம் (சராசரியாக) | ஒரு மாதத்திற்கு | 3,000.00 |
| 3 | **மற்ற அனைத்து உணவு கூடங்கள்/விடுதிகள்** | | |
| | அ. சராசரியாக 1000 கிலோ அளவிற்கு திடக்கழிவு உருவாக்கம் | ஒரு மாதத்திற்கு | 300.00 |
| | ஆ. சராசரியாக 1000 கிலோ அளவிற்கு மேல் திடக்கழிவு உருவாக்கம் | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| **இ. திரையரங்குகள்** | | | |

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒரு திரையுடன் உள்ள A வகுப்பு திரையரங்குகள் | ஒரு மாதத்திற்கு | 3,000.00 |
| | ஒவ்வொரு கூடுதல் திரைக்கும் | ஒரு மாதத்திற்கு | 1,500.00 |
| 2 | ஒரு திரையுடன் உள்ள B வகுப்பு திரையரங்குகள் | ஒரு மாதத்திற்கு | 2,000.00 |
| | ஒவ்வொரு கூடுதல் திரைக்கும் | ஒரு மாதத்திற்கு | 1,000.00 |
| **ஈ. அலுவலகங்கள்** | | | |
| 1 | 1000 ச.அடிக்கு குறைவான பரப்பளவு அரசு மற்றும் தனியார் அலுவலக வளாகங்கள் | ஒரு மாதத்திற்கு | 300.00 |
| 2 | 1000 ச.அடிக்கு மேல் 5000 ச.அடிக்குள் பரப்பளவு உள்ள அரசு மற்றும் தனியார் அலுவலக வளாகங்கள் | ஒரு மாதத்திற்கு | 1,000.00 |
| 3 | 5000 ச.அடிக்கு மேல் பரப்பளவு உள்ள அரசு மற்றும் தனியார் அலுவலக வளாகங்கள் | ஒரு மாதத்திற்கு | 3,000.00 |
| **உ. தொழில் உரிம கட்டண வகைப்பாடுகள்** | | | |
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையின் வணிக வகைகள் – அடுமனை, ரொட்டிக்கடைகள், மாமிச கடைகள், தேங்காய் கடைகள், குளிர்பான கடைகள், பால் அங்காடிகள், கடல் உணவு, AMFவுடன் கூடிய தேநீர் கடைகள், காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை | | |
| | அ. 500 ச.அடிக்கு குறைவான | ஒரு மாதத்திற்கு | 200.00 |

| | | | |
|---|---|---|---|
| | பரப்பளவு உள்ளவை | | |
| | ஆ. 500 ச.அடிக்கு மேல் 1000 ச.அடிக்குள் பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 300.00 |
| | இ. 1000 ச.அடிக்கு மேல் பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| 2 | பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையின் வணிக வகைகள் – சிற்றுண்டி, உணவு கூடங்கள், உணவு அருந்தும் இடம், துரித உணவகம், அசைவ உணவகம், சிற்றுண்டி உணவகம், சிற்றுண்டியுடன் உள்ள தேநீர் கடை | | |
| | அ. 500 ச.அடிக்கு குறைவான பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 300.00 |
| | ஆ. 501 ச.அடிக்கு மேல் 1000 ச.அடிக்குள் பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| | இ. 1001 ச.அடிக்கு மேல் பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 1000.00 |
| 3 | பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையின் வணிக வகைகள் – இதர அனைத்து வணிக வகைப்பாடுகள் | | |
| | அ. 1000 ச.அடிக்கு குறைவான பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 200.00 |
| | ஆ. 1001 ச.அடிக்கு மேல் பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| **III. திறந்த பொது இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள் * (விழாக்கள், கொண்டாட்டங்கள், ஆர்பாட்டங்கள்)** | | | |
| 1 | 500 நபர்களுக்கு குறைவான கூட்டம் | ஒரு நிகழ்வு | 5,000.00 |
| 2 | 501 லிருந்து 1000க்கு குறைவான நபர்கள் கூடும் | ஒரு நிகழ்வு | 10,000.00 |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டம் | | |
| 3 | 1000க்கு அதிகமான நபர்கள் கூடும் கூட்டம் | ஒரு நிகழ்வு | 20,000.00 |
| **IV. தனியார் மருத்துவமனை/மருத்துவமனை (உயிர் மருத்துவ கழிவுகள் அல்லாதவை)** | | | |
| 1 | அ. 50 படுக்கைகளுக்கு கீழ் உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 2,000.00 |
| | ஆ. 51-250 படுக்கைகள் | ஒரு மாதத்திற்கு | 3,000.00 |
| | இ. 251-500 படுக்கைகள் | ஒரு மாதத்திற்கு | 4,000.00 |
| 2 | **படுக்கை வசதி இல்லாத மருத்துவமனை** | | |
| | அ. மருத்துவமனை | ஒரு மாதத்திற்கு | 1,000.00 |
| | ஆ. தனியார் மருத்துவமனை | ஒரு மாதத்திற்கு | 1,000.00 |
| | இ. இரத்த வங்கிகள் | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| | ஈ. ஸ்கேன் மையங்கள் | ஒரு மாதத்திற்கு | 2,000.00 |
| **V. கல்வி கூடங்கள்** | | | |
| 1 | உறைவிடம் இல்லாத தனியார் பள்ளிகள் | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| 2 | உறைவிடத்துடன் உள்ள தனியார் பள்ளிகள் | ஒரு மாதத்திற்கு | 1500.00 |
| 3 | தனியார் மற்றும் அரசு கல்லூரிகள் | ஒரு மாதத்திற்கு | 3,000.00 |
| **VI. மற்றவை** | | | |
| 1 | வழிபாட்டு தலங்கள் (மதசார்புடையவை) | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| 2 | மற்றவை (மேலே கண்ட வகைப்பாட்டில் இல்லாதவை) | | |
| | அ. 1000 ச.அடிக்கு குறைவான | ஒரு மாதத்திற்கு | 200.00 |

| | | | |
|---|---|---|---|
| | பரப்பளவு உள்ளவை | | |
| | ஆ. 1001 ச.அடிக்கு மேல் பரப்பளவு உள்ளவை | ஒரு மாதத்திற்கு | 500.00 |
| **VII. மற்ற கழிவுகள்** | | | |
| 1 | மரக் கழிவுகள் நாற்றங்கால் மற்றும் தோட்ட கழிவுகள் | ஒரு நடைக்கு 1 டன் எடை கொண்டவை | 500.00 |
| | | ஒரு நடைக்கு 1 டன்க்கு மேல் எடை கொண்டவை | 1,000.00 |
| 2 | கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் | ஒரு நடைக்கு 1 டன் எடை கொண்டவை | 500.00 |
| | | ஒரு நடைக்கு 1 டன்க்கு மேல் எடை கொண்டவை | 3,000.00 |

***திறந்த பொது இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள்* (விழாக்கள், கொண்டாட்டங்கள், ஆர்பாட்டங்கள்)-இறுதி சடங்கு சம்பந்தமான நிகழ்வுகள், விழிப்புணர்வு சம்பந்தமாக பள்ளி மாணவர்கள், அரசு மற்றும் அது சார்ந்த நிறுவனங்கள் நடத்தப்படும் நிகழ்வுகள் தவிர்த்து**

## அட்டணை -II

### மக்கக்கூடிய கழிவுகள் மற்றும் மறுசுழற்சிக்குகந்த கழிவுகள் ஆகியவைகளின் விளக்கப்பட்டியல் (துணை விதி 3(5) & 3(53) காண்க)

| மக்கக்கூடிய உயிரி கழிவுகள் | மறுசுழற்சிக்குகந்த கழிவுகள் |
|---|---|
| மக்கக்கூடிய உயிரி கழிவுகள் என்பது நுண்ம உயிரினங்களினால் சாதாரண நிலையான மக்கக்கூடிய பொருட்களான மாறக்கூடியவை என்று பொருள்படும். அவைகள் ஈரப்பதம் வாய்ந்த கழிவுகள் என்றும் அழைக்கப்படும். மக்கும் உயிரி கழிவானது, பிற உயிருள்ள நுண்ம உயிரினங்களுடன் கலந்து மக்கும் தன்மை கொண்ட தாவரங்கள் அல்லது விலங்குகளின் மூலம் உருவாகும் கழிவு வகையாகும். | மறுசுழற்சிக்குகந்த கழிவுகள் என்பது பொதுவாக நகராட்சி திடக்கழிவுகளில் உள்ள கழிவுகள். இது உலர் கழிவுகள் என்றும் அழைக்கப்படும். இவைகள் ஒரு புதிய பொருள் அசல் பொருளைப்போல இருந்தாலும் இல்லாவிட்டாலும், புதிய மூலப்பொருளாக மாற்றப்படலாம். |
| • தேநீர் இலைகள், முட்டை ஓடுகள், பழங்கள், காய்கறி தோல்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் உள்ளிட்ட சமையலறை கழிவுகள்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• தோட்ட மற்றும் பூக்கழிவுகள் உட்பட இலைக் கழிவுகள்<br>• விலங்குக்கழிவுகள்<br>• அழுக்கடைந்த தாள்கள்<br>• வீடுகளை பெருக்கும் போது உருவாகும் தூசிகள்.<br>• தேங்காய் ஓடுகள்<br>• சாம்பல்கள் | • செய்தித்தாள்கள்<br>• தாள்கள், புத்தகங்கள், இதழ்கள்,<br>• கண்ணாடிப்பொருட்கள் மற்றும் ஒயர்<br>• பிளாஸ்டிக்<br>• கந்தை துணிகள்<br>• தோல்<br>• ரெக்சின்<br>• ரப்பர்<br>• மரம்/நாற்காலிகள்<br>• சிப்பம் கட்டும் பொருட்கள் |

## அட்டவணை -III

### தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுகளின் விளக்கப்பட்டியல்

### (துணை விதி 3(19) & 3(29) காண்க)

- காற்றழுத்த குப்பிகள்
- ஒளியுமிழ் விளக்குகளின் மின்கலப்பொருட்கள் மற்றும் பட்டன் செல்கள்.
- இல்லங்களில்பயன்படுத்தப்பட்ட வெளுப்பான்கள் மற்றும் வடிகால் சுத்திகரிப்பான்கள் மற்றும் அவைகளின் கொள்கலங்கள்.
- உந்து வண்டி மின்கலப்பொருட்கள், எண்ணெய் வடிப்பான்கள் உந்து வண்டி பாதுகாப்பு பொருட்கள் மற்றும் நுகர்வு பொருட்கள்.
- வேதியில் பொருட்கள் மற்றும் கலையும் பொருட்கள் மற்றும் அவைகளை வைத்திருக்கும் கொள்கலங்கள்.
- அழகுசாதன பொருட்கள், வேதியியல் பொருட்களை அடிப்படையாக கொண்ட பூச்சிகொல்லிகள் மற்றும் அவைகளை வைத்திருக்கும் கொள்கலங்கள்.
- ஒளி தரும் விளக்குகள், குழல் -விளக்குகள் மற்றும் கையடக்க ஒளிதரும் விளக்குகள் (CFL), LED விளக்குகள்.
- தேவையில்லை என்று களையப்பட்ட மருந்துகள் மற்றும் அவைகளை வைத்திருக்கும் கொள்கலங்கள்.
- வர்ணங்கள், எண்ணெய்கள், உயவு எண்ணெய்கள், களிம்புகள், கரைப்பான் மற்றும் அவைகளை வைத்திருக்கும் கொள்கலன்கள்.
- பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைகொல்லிகள் மற்றும்அவைகளை வைத்திருக்கும் கொள்கலன்கள்.
- புகைப்பட கேட்பொலி/காணொலி நாடாக்கள் மற்றும் அவைகளை வைத்திருக்கும் கொள்கலன்கள்.
- மரசாமான்களை / தளவாடங்களை கட்டும் விரிவடையும் பிளாஸ்டிக் சிப்பப் பொருட்கள்.
- வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள்.
- தனியர் கணிணிகள், தொலைபேசிகள், எம்.பி.3 பிளேயர்ஸ், கேட்பொலி இயந்திரங்கள் தொலைக்காட்சி பெட்டிகள், கணிப்பான்கள், ஜி.பி.எஸ் தானியங்கி மின்சாதன பொருட்கள் ஒளிரும் எழுத்துக்கள் வரும் புகைப்பட கருவிகள் மற்றும் டி.வி.டி.கள், வீடியோ காசெட் ரெக்கார்டர்கள், கேம்கார்டர்கள் போன்ற காணொலி கருவிகளான பிளேயர்கள் மற்றும் பதிவு செய்யும் கருவிகள் போன்ற மின்சாதன கருவிகள்.

## அட்டவணை –IV

### அபராதங்கள்

### (துணை விதி 5.1&8ல் காண்க)

| வ. எண் | துணை பிரிவு/பிரிவு விதிகளின் விவரங்கள் | அபராத தொகை (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பொது மற்றும் தனியார் இடங்களில் தூக்கி எரியப்படும் குப்பைகள் / வாகனங்களிலிருந்து குப்பை கொட்டுதல் | 500.00 |
| 2 | **தரம் பிரிக்கப்படாத கழிவுகளின் வகைகள்** | |
| | அ. தனி நபர் இல்லங்கள் | 100.00 |
| | ஆ. அடுக்குமாடி குடியிருப்பு/குழு குடியிருப்புகள் | 1000.00 |
| | இ. பெருமளவு குப்பை உருவாக்குபவர்கள் | 5000.00 |
| 3 | **அங்கீகரிக்கப்படாத பொது இடங்களில் கட்டுமான மற்றும் இடிபாடு கழிவுகளை கொட்டுதல்** | |
| | அ. ஒரு டன் வரை | 2000.00 |
| | ஆ. ஒரு டன்னுக்கு மேற்பட்டவை | 5000.00 |
| 4 | தோட்டக்கழிவுகள், மரக்கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் | 200.00 |
| 5 | குப்பை தொட்டி/கழிவு நீர் பாதை/கால்வாய்/நீர் நிலைகளில் குப்பை கொட்டுதல் | 500.00 |
| 6 | **திடக்கழிவுகளை எரித்தல்** | |
| | அ. தனியார் இடங்கள் | 500.00 |
| | ஆ. பொது இடங்கள் | 1000.00 |
| | இ.வணிக வளாகங்களில் திடக்கழிவு உருவாக்குபவர்களால் குப்பைகளை எரித்தல் | 2000.00 |
| 7 | மீன், வளர்ப்பு பறவைகள், இறைச்சி கழிவுகள் (வீடுகளை தவிர்த்து) தரம் பிரிக்காமல் கொடுப்பது | 1000.00 |

| | | |
|---|---|---|
| 8 | விற்பனையாளர்கள் / கூவி விற்பவர்கள்/ கடை வியாபரிகள் குப்பை தொட்டி / குப்பை கூடை வைத்து இருக்காமல் இருப்பது | 100.00 |
| 9 | விற்பணையாளர்கள் / கூவி விற்பவர்கள் தரம் பிரிக்காமல் கொடுப்பது | 200.00 |
| 10 | எண்ணிலடங்காத மக்கள் சேர்ந்து நடத்தப்படும் நிகழ்ச்சிகள் / பொது நிகழ்ச்சிகள் நடந்த இடங்களில் 12 மணி நேரத்திற்குள் தூய்மைப்படுத்தாமல் வைத்து இருப்பது | 5000.00 |

**படிவம் - I**

**(துணை விதிகள் 5 (19) காண்க)**

**திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 குறித்து சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட வேண்டிய ஆண்டு அறிக்கையின் படிவம்.**

| ஆண்டு | | அறிக்கை சமர்ப்பிக்கும் தேதி |
|---|---|---|
| 1 | மாநகரம்/நகரம்/மாநிலத்தின் பெயர் | |
| 2 | மக்கள் தொகை | |
| 3 | பரப்பளவு(சதுர கி.மீ-ல்) | |
| 4 | உள்ளாட்சி அமைப்பின் பெயர் மற்றும் முகவரி | |
| | தொலைபேசி எண் | |
| | தொலை நகலி எண் | |
| | மின்னஞ்சல் | |
| 5 | திடக்கழிவு மேலாண்மைக்கு பொறுப்பு வகிக்கும் அலுவலரின் பெயர் | |
| | தொலைபேசி எண் | |
| | தொலை நகலி எண் | |
| | மின்னஞ்சல் | |
| 6 | மாநகரில் / நகரில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை | |
| | மாநகரத்திலுள்ள குடியிருப்பு அல்லாத கட்டிடங்களின் எண்ணிக்கை | |

| | | |
|---|---|---|
| | மாநகரம் / நகரங்களில் இருக்கும் தேர்தல் / நிர்வாக வார்டுகளின் எண்ணிக்கை | |
| 7 | உருவாகும் திடக்கழிவின் அளவு | |
| | உள்ளாட்சிப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் திடக்கழிவு உற்பத்தி அளவு | டன் நாளொன்றுக்கு |
| | சேகரமாகும் திடக்கழிவின் தினசரி அளவு | டன் நாளொன்றுக்கு |
| | தனிநபர் திடக்கழிவு தினசரி சேகரிப்பு அளவு | கிராம்/ நாளொன்றுக்கு |
| | பதப்படுத்தப்பட்ட திடக்கழிவின் அளவு | டன் நாளொன்றுக்கு |
| | கொள்ளுமிடத்தில் திடக்கழிவின் அளவு | டன் நாளொன்றுக்கு |
| 8 | திடக்கழிவு மேலாண்மை(SWM) சேவையின் தற்போதைய நிலை | |
| | திடக்கழிவினை உருவாகுமிடத்தில் பிரித்தல் மற்றும் சேகரித்து வைத்தல். | |
| | திடக்கழிவுகள் அவை உருவாகுமிடமான வீடு/வணிக நிறுவனங்கள் / நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுக்கான தொட்டியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளனவா? | ஆம்/இல்லை |

| | | |
|---|---|---|
| | ஆம் எனில் கழிவுகளை அது உருவாகுமிடத்தில் உள்ள திடக்கழிவு குப்பை தொட்டியில் சேமிக்கும் நடைமுறையைப் பின்பற்றுகிற குடும்பங்களின் விகிதாச்சாரம். | % |
| | திடக்கழிவு கழிவுகளை உருவாகுமிடமான குடியிருப்பு அல்லாத கட்டிடங்களில் உள்ள வணிக நிறுவனங்களின் / நிறுவனங்களின் திடக்கழிவு தொட்டிகளில் சேமிப்பவர்களின் விகிதாச்சாரம். | % |
| | திடக்கழிவுகளை தெருக்களில் வைக்கும் / தூர எறியும் குடும்பத்தாரின் விகிதாச்சாரம் | % |
| | திடக்கழிவுகளை தெருக்களில் வைக்கும் / தூர எறியும் குடியிருப்பு அல்லாத வளாகங்களின் விகிதாச்சாரம். | % |
| | திடக்கழிவுகள் உருவாகுமிடங்களில் சேகரிக்கும் திடக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டுள்ளனவா? | ஆம்/இல்லை |
| | ஆம் எனில், உருவாகும் இடங்களில் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டுள்ள வளாகங்களின் விகிதாச்சாரம் | % |
| | வாயில் தோறும் | |

| | | |
|---|---|---|
| | சேகரிக்கப்படும் திடக்கழிவு | |
| | மாநகரம் / நகரங்களில் வாயில் தோறும் (D2D) திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறதா | ஆம்/இல்லை |
| | ஆம் எனில் | |
| | வாயில்தோறும் கழிவுகள் சேகரிக்கப்படும் வார்டுகளின் எண்ணிக்கை | |
| | நடைமுறைப்படுத்தப்படும் வீடுகளின் எண்ணிக்கை | |
| | வணிக நிறுவனங்கள் / உணவகங்கள் / உணவு விடுதி, கல்வி நிலையங்கள் / அலுவலகங்கள் உள்பட்ட குடியிருப்பு அல்லாத கட்டிடங்களின் எண்ணிக்கை | |
| | குடியிருப்புகள் மற்றும் - குடியிருப்பு அல்லாத கட்டடங்களில் வாயில் தோறும் சேகரிக்கப்படும் விகிதாச்சாரம் | |
| | மோட்டார் வாகனங்களின் மூலமாக | % |
| | கொள்கலம் கொண்ட மூன்று சக்கர வாகனம் / கைவண்டிகளின் மூலமாக | % |
| | இதர சாதனங்களின் மூலமாக | % |
| | இல்லையெனில், முதல் நிலை சேகரிப்பிற்கான முறைகள் | |
| | தெருக்களை பெருக்குதல் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாநகரில் சுத்தம் செய்ய வேண்டிய சாலைகள், தெருக்கள், சந்துகள், ஊடு சந்துகளின் நீள அளவு | கி.மீ | | | | |
| | எத்தனை முறை தெருக்கள் சுத்தம் செய்யப்படுகின்றன? அதன் மக்கள் தொகை விகிதாச்சாரம் | கால இடை வெளியின் எண்ணிக் கை | நாள் தோறு ம் | ஒரு நாள் விட் டு ஒரு நாள் | வாரத் திற்கு இரு மு றை | எப்பொ ழுதாவது |
| | | செயல்படுத்த ப்படும் மக்கள் தொகையின் விழுக்காடு | | | | |
| | பயன்படுத்தப்பட்ட தளவாட சாமான்கள் | | | | | |
| | மனித சுத்திகரிப்பு | % | | | | |
| | இயந்திர சுத்திகரிப்பு | % | | | | |
| | துப்புரவு பணியாளர்களால் நீண்ட கைபிடித் துடைப்பம் பயன்படுத்தப்பட்டதா? | ஆம் / இல்லை | | | | |
| | ஒவ்வொரு துப்புரவு பணியாளருக்கும் கழிவுகளை சேகரிக்க, கைவண்டி/மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டதா? | ஆம் / இல்லை | | | | |
| | கைவண்டி / மூன்று சக்கர வாகனம் ஆகியவை கொள்கலத்துடன் கூடியதா? | ஆம் / இல்லை | | | | |
| | சேகரிக்க பயன்படும் சாதனங்கள் சேகரிப்பு / கழிவு களை சேமிக்கும் கொள்கலன்களுடன் ஒத்துப்போகிறதா? | ஆம் / இல்லை | | | | |

| | | |
|---|---|---|
| | இரண்டாம் நிலை சேமிப்பு கிடங்கு வசதி | |
| | மாநகரிலுள்ள / நகரங்களில் உள்ள கழிவு கிடங்குகளின் வகைப்பாடு மற்றும் எண்ணிக்கை | ……………….சேமிப்பு எண்ணிக்கை<br>…………………கொள்ளளவு $m^3$ |
| | திறந்தவெளிக் கழிவு சேமிப்புக் கிடங்குகள் | |
| | கட்டட குப்பைத்தொட்டிகள் | |
| | உருளை வடிவ சிமெண்ட் கான்கிரீட் தொட்டிகள் | |
| | (Dhalao)/மூடிய அறைகள் / இடம் | |
| | உலோகம் மற்றும் பிளாஸ்டிக் கொள்கலன்கள்<br>1) 1.1 $m^3$ கொள்ளளவு வரையிலான தொட்டிகள்<br>2) 2 முதல் 5 $m^3$ கொள்ளளவு தொட்டிகள்<br>3) 5 $m^3$அதிகமான கொள்ளளவு கொண்ட தொட்டிகள் | |
| | குப்பைத்தொட்டிகள் இல்லாத மாநகரம் | |
| | ஒரு குப்பை தொட்டி / மக்கள் தொகை விகிதம் | |
| | வார்டுவாரி கழிவுசேகரிப்பு கிடங்குகளின் விபரங்கள் (இணைப்பு) | |
| | வார்டு எண் | |
| | பரப்பளவு: | |
| | மக்கள் தொகை | |
| | வைக்கப்பட்டுள்ள குப்பை | |

<table>
<tr><td></td><td>தொட்டிகளின் எண்ணிக்கை</td><td></td></tr>
<tr><td></td><td>வைக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகளின் மொத்த கொள்ளளவு</td><td></td></tr>
<tr><td></td><td>கழிவு சேமிப்பு கட்டமைப்புகளின் மொத்த சேமிப்பு கொள்ளளவு (கன மீட்டரில்)</td><td></td></tr>
<tr><td></td><td>கழிவு சேமிப்பு கிடங்குகளில் தினந்தோறும் சேமித்து வைக்கப்பட்டுள்ள மொத்த கழிவுகள்</td><td></td></tr>
<tr><td></td><td>கிடங்குகளிலிருந்து கழிவுகள் எத்தனை முறை சேகரிக்கப்படுகிறது? மற்றும் காலியாக்கப்பட்ட தொட்டிகளின் எண்ணிக்கை</td><td>
<table>
<tr><th>கால இடைவெளி</th><th>தொட்டிகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>தினந்தோறும்</td><td></td></tr>
<tr><td>ஒரு நாள் விட்டு ஒரு நாள்</td><td></td></tr>
<tr><td>வாரம் இரு முறை</td><td></td></tr>
<tr><td>வாரத்திற்கு ஒரு முறை</td><td></td></tr>
<tr><td>எப்பொழுதாவது</td><td></td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td rowspan="4">பச்சை, நீலம் மற்றும் கருப்பு நிறத்திலான தொட்டிகளில் கழிவுகளை பிரித்து வைப்பதற்கு உண்டான வசதிகள் கொண்டவையாக கழிவு கிடங்குகள் உள்ளனவா?</td><td>ஆம் எனில் (ஆம் என்றால், விவரங்கள் சேர்க்கவும்)</td></tr>
<tr><td rowspan="3"></td><td>பச்சை தொட்டிகளின் எண்ணிக்கை</td></tr>
<tr><td>நீலத் தொட்டிகளின் எண்ணிக்கை</td></tr>
<tr><td>கருப்பு தொட்டிகளின் எண்ணிக்கை</td></tr>
<tr><td></td><td>சேமிப்பு கிடங்குகளிலிருந்து திடக்கழிவுகள் கைகளால்</td><td></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | அல்லது இயந்திரத்தின் மூலமாக வெளியேற்றப்படுகிறதா, சதவிகிதத்தில் | | |
| | மனிதர்களால் வெளியேற்றப்படும் திடக்கழிவின் சதவிகிதம் | % | |
| | இயந்திரத்தினால் வெளியேற்றப்படும் திடக்கழிவின் சதவிகிதம் | % | |
| | இயந்திரத்தினால் என்றால் எவ்வகை வழிமுறை என தெரிவிக்கவும் | முன்வழி தூக்கிகள் / மேல் வழி தூக்கிகள் | |
| | திடக்கழிவுகள் வீடு வீடாக தரம் பிரிக்கப்பட்ட நிலையில் நேரடியாக பதனிடும் ஆலைக்கு கொண்டு செல்லப்படுகிறதா? | ஆம் / இல்லை<br>(ஆம் என்றால் விவரிக்கவும்) | |
| | தினசரி திடக்கழிவு போக்குவரத்து பயன்பாட்டு இயந்திரங்கள் வகை மற்றும் பதிவெண்கள் | எடுத்துச் செல்லப்பட்ட கழிவுகளின் எடை | பயண எண்ணிக்கை |
| | மாட்டுவண்டி | | |
| | டிராக்டர் | | |
| | தானியங்கி கொட்டும் வசதி இல்லா வாகனங்கள் | | |
| | தானியங்கி கொட்டும் வசதி உள்ள வாகனங்கள் | | |
| | டம்பர் பிலேசர் வாகனங்கள் | | |
| | கழிவுப் பொருள் சேகரிப்பவைகள் | | |

<table>
<tr><td></td><td>நெருக்கிகள்</td><td></td><td></td></tr>
<tr><td></td><td>இதர வாகனங்கள்</td><td></td><td></td></tr>
<tr><td></td><td>JCB/லோடர்</td><td></td><td></td></tr>
<tr><td rowspan="6"></td><td rowspan="6">கழிவு சேகரிப்பகங்களிலிருந்து எத்தனை முறை கழிவு அப்புறப்படுத்தப்படுகிறது.</td><td>முறைகளின் எண்ணிக்கை</td><td>எடுத்துச் செல்லப்பட்ட கழிவின் சதவிகிதம்</td></tr>
<tr><td>தினந்தோறும்</td><td></td></tr>
<tr><td>ஒரு நாள் விட்டு ஒரு நாள்</td><td></td></tr>
<tr><td>வாரம் இரு முறை:</td><td></td></tr>
<tr><td>வாரத்திற்கு ஒரு முறை</td><td></td></tr>
<tr><td>எப்பொழுதாவது</td><td></td></tr>
<tr><td></td><td>ஒவ்வொரு நாளும் அப்புறப்படுத்தப்படும் கழிவின் அளவு</td><td colspan="2">டன் நாளொன்றுக்கு</td></tr>
<tr><td></td><td>நாள்தோறும் அப்புறப்படுத்தப்படும் மொத்த கழிவின் சதவிகிதம்</td><td colspan="2">%</td></tr>
<tr><td></td><td>பயன்படுத்தப்படும் கழிவு சுத்திகரிப்பு தொழில் நுட்பம்</td><td colspan="2"></td></tr>
<tr><td></td><td>திடக்கழிவு பதனிடப்படுகிறதா?</td><td colspan="2">ஆம்/இல்லை</td></tr>
<tr><td></td><td>ஆம் எனில், நாள்தோறும் பதனிடப்பட்ட மொத்த கழிவின் அளவு</td><td colspan="2">டன் நாளொன்றுக்கு</td></tr>
<tr><td></td><td>பதனிடுதல் உள்ளாட்சி அமைப்பால் மேற்கொள்ளப்படுகிறதா அல்லது வேறு ஏதேனும் முகமை மூலம் மேற்கொள்ளப்படுகிறதா?</td><td colspan="2"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கழிவு பதனிடுவதற்காக உள்ளாட்சி மன்றத்தில் கையிருப்பில் இருக்கக்கூடிய நிலம் ஹெக்டேரில் | |
| | தற்போது கழிவு பதனிடுவதற்காக பயன்படுத்தப்படும் நில அளவு | |
| | செயல்பாட்டில் உள்ள திடக்கழிவு பதனிடும் கட்டமைப்புகள் | |
| | கட்டமைக்கப்பட்டு வரும் திடக்கழிவு பதனிடும் கட்டமைப்புகள் | |
| | மாநகர / நகர எல்லைகளிலிருந்து பதனிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடத்திற்குட்பட்ட தூரம் | |
| | பின்பற்றப்படும் தொழில் நுட்ப வசதி குறித்த விவரங்கள், உரமாக்குதல் | 1. பதப்படுத்தப்பட்ட மூலப்பொருளின் அளவு<br>2.இறுதியாக கிடைக்கப்பெற்ற அளவு<br>3.விற்பனை செய்யப்பட்ட அளவு<br>4.குப்பை கொட்டும் வளாகத்தில் நிரவுவதற்கு அனுப்பப்பட்ட எச்சக் கழிவுகள் |
| | மண்புழு உரம் தயாரித்தல் | 1. பதப்படுத்தப்பட்ட மூலப்பொருளின் அளவு<br>2.இறுதியாக கிடைக்கப்பெற்ற அளவு<br>3.விற்பனை செய்யப்பட்ட அளவு<br>4.குப்பை கொட்டும் வளாகத்தில் நிரவுவதற்கு அனுப்பப்பட்ட எச்சக் கழிவுகள் |
| | உயிரி - எரிவாயு (சாண எரிவாயு) தயாரித்தல் | 1. பதப்படுத்தப்பட்ட மூலப்பொருளின் அளவு<br>2.இறுதியாக கிடைக்கப்பெற்ற அளவு<br>3.விற்பனை செய்யப்பட்ட அளவு |

| | | |
|---|---|---|
| | | 4.குப்பை கொட்டும் வளாகத்தில் நிரவுவதற்கு அனுப்பப்பட்ட எச்சக் கழிவுகள் |
| | திடக்கழிவிலிருந்து எரிபொருள் எடுத்தல் | 1. பதப்படுத்தப்பட்ட மூலப்பொருளின் அளவு<br>2.இறுதியாக கிடைக்கப்பெற்ற அளவு<br>3.விற்பனை செய்யப்பட்ட அளவு<br>4.குப்பை கொட்டும் வளாகத்தில் நிரவுவதற்கு அனுப்பப்பட்ட எச்சக் கழிவுகள் |
| | கழிவிலிருந்து எரிதிறன் பெறும் தொழில்நுட்பம் எரித்தல், ஆவியாக்குதல், Phrolysis மற்றும் ஏனைய தொழில் நுட்பங்களை போன்று (விவரங்கள் அளிக்கவும்) | 1. பதப்படுத்தப்பட்ட மூலப்பொருளின் அளவு<br>2.இறுதியாக கிடைக்கப்பெற்ற அளவு<br>3.விற்பனை செய்யப்பட்ட அளவு<br>4.குப்பை கொட்டும் வளாகத்தில் நிரவுவதற்கு அனுப்பப்பட்ட எச்சக் கழிவுகள் |
| | இணை பதனிடும் முறைகள் | பதனிடப்பட்ட மூலப்பொருளின் அளவு |
| | சிமெண்ட் ஆலைக்கு வழங்கப்பட்ட தீத்திறன் கழிவுகள் | |
| | திடக்கழிவு சார்ந்த மின்சக்தி தயாரிப்பு ஆலைகளுக்கு வழங்கப்பட்ட தீத்திறனுள்ள கழிவுகள் | |
| | ஏனையவை | அளவு |
| | திடக்கழிவுகளை அகற்றும் கட்டமைப்பு வசதிகள் | |

| | | |
|---|---|---|
| | சென்னை நகராட்சி குப்பையை குவிக்கக் கூடிய இடங்களின் எண்ணிக்கை | |
| | உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சுகாதார குப்பை கொட்டும் வளாகங்கள் எண்ணிக்கை | |
| | கழிவுகள் நிரவப்படும் நிலப்பகுதிகளின் பரப்பளவு எவ்வளவு | |
| | தற்போது கழிவுகளை கழிக்க பயன்படும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு | |
| | மாநகர / நகரங்களிலிருந்து குப்பை குவிப்பதற்கான நிலம் / நிலபரப்பு வசதிகளின் தூரம் | கி.மீ |
| | அருகிலுள்ள குடியிருப்பு பகுதியிலிருந்து தூரம் | கி.மீ |
| | நீர் நிலைகளிலிருந்து தூரம் | கி.மீ |
| | தேசிய / மாநில நெடுஞ்சாலையிலிருந்து தூரம் | கி.மீ |
| | விமான நிலையத்திலிருந்து தூரம் | கி.மீ |
| | சமயம் சார்ந்த முக்கியமான இடங்கள் / வரலாற்று சின்னங்கள் அமைந்துள்ள இடங்களிலிருந்து தூரம் | கி.மீ |
| | வெள்ள அபாயம் கொண்ட பகுதியில் அமைந்துள்ளதா? | ஆம் / இல்லை |
| | பூகம்ப குறியீட்டு கோட்டு எல்லைக்குள் அமைந்துள்ளதா? | ஆம் / இல்லை |
| | அன்றாடம் கொட்டப்படும் கழிவின் அளவு | நாள் ஒன்றுக்கான டன் (TPD) |

| | | |
|---|---|---|
| | திடக்கழிவுகளை கொட்டும் வளாகப் பகுதிகளில் வேலி அமைக்கப்பட்டுள்ளதா ? | ஆம் / இல்லை |
| | பயன்படுத்தப்படும் நிலப்பரப்பு வெளிச்சம் கிடைக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதா ? | ஆம் / இல்லை |
| | எடை மேடை வசதி உள்ளதா ? | ஆம் / இல்லை |
| | திடக்கழிவுகளை கொட்டும் வளாகப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் கருவிகள் (குறிப்பிடவும்) | சமன் பொறி நெருக்கிகள் ஆகியவை |
| | திடக்கழிவுகளை நிரவல் வளாகப் பகுதிகளில் பணியமத்தப்பட்டுள்ள தொழிலாளர்கள் விவரங்கள் | ஆம் / இல்லை (ஆம் என்றால். விவரங்கள் இணைக்கவும்) |
| | தினசரி குப்பை போர்வை இடப்படுகிறதா ? | ஆம் / இல்லை |
| | இல்லையெனில், எவ்வளவு கால இடைவெளியில் திடக்கழிவுகளை கொட்டப்பட்டுள்ள பகுதிகளில் போர்வையிடப்படுகிறது. | |
| | போர்வையிடுவதற்கான மூலப்பொருள் | |
| | போதிய போர்வை இடு பொருள் கையிருப்பில் உள்ளதா ? | ஆம் / இல்லை |
| | வாயு வெளியேற்ற முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா ? | ஆம் / இல்லை (ஆம் என்றால். விவரங்கள் இணைக்கவும்) |
| | கழிவு கசிவு நீர் சேகரிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா ? | ஆம் / இல்லை (ஆம் என்றால் விவரங்கள் இணைக்கவும்) |

| | | |
|---|---|---|
| 9 | நகரில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்த தக்க செயல் திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா ? | ஆம் / இல்லை<br>(ஆம் என்றால், நுட்ப செயல் திட்டம் குறித்த விவரங்களை இணைக்கவும்) |
| 10 | கீழ்கண்ட இனங்களுக்கு தனியே வசதிகள் செய்யப்பட்டுள்ளதா ? | திட்டங்கள்,எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை இணைக்கவும் |
| | பால் பொருள் சம்பந்தமான செயல்பாடுகள்: | ஆம் / இல்லை |
| | இறைச்சிக் கொட்டில் கழிவுகள்: | ஆம் / இல்லை |
| | கட்டிட மற்றும் இடிப்பாட்டுக் கழிவுகள் ( C&D Waste) | ஆம் / இல்லை |
| 11 | திட்ட முடிவுக்கு பிந்தைய விவரங்கள் | திட்ட மாதிரியை இணைக்கவும் |
| 12 | எத்தனை குடிசை பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன ? அங்கு திடக்கழிவு மேலாண்மை வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா? | ஆம் / இல்லை (ஆம் என்றால். விவரங்கள் இணைக்கவும் |
| 13 | சேகரிப்பதற்ககாகவும் கழிவுகளை அப்புறப்படுத்தவும், பதனிடவும், கொண்டு செல்வதற்காகவும், இரண்டாம் நிலை சேகரித்தலுக்கும், தெருவை சுத்தம் செய்வதற்காகவும் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்கள் குறித்த விவரங்களை அளிக்கவும். | |
| 14 | தெருவை சுத்தம் செய்வதற்கும், இரண்டாம் நிலை கழிவு அகற்றுவதற்காகவும், கொண்டு செல்வதற்காகவும், பதனிடுவதற்காகவும், கழிவு அகற்றுவதற்காகவும், கழிவு சேகரிப்பது உட்பட ஒப்பந்ததாரர் / சலுகை கொடை உரிமை பெற்றவரால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள் குறித்த விவரங்களை அளிக்கவும். | |

| | | |
|---|---|---|
| 15 | இந்த விதிகளை பின்பற்றுவதில் உள்ளாட்சி நகரங்கள் சந்திக்கும் பிரச்சினைகளை / சுருக்கமாக கூறவும். | |
| 16 | திடக்கழிவு சம்பந்தமாக பிரச்சினை சமாளிப்பதற்கு மற்ற உள்ளாட்சி அமைப்புகளும் நடைமுறைப்படுத்தும் படியான யோசனைகள் ஏதேனும் இருப்பின் சுருக்கமாக கூறவும். | |

**ஹர்மந்தர் சிங்**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**